23RD JANUARY 2025

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 66 | பக்கங்கள் - 13 | editor.uthayam@gmail.com

# முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜம்மியதுல் உலமா சபை சந்திப்பு

## பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வு!

பாராளுமன்றத்துக்கு இம்முறை தெரிவு செய்யப்பட்ட புதிய உறுப்பினர்களுக்கு அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவினால் நேற்று இரவு வரவேற்பு உபசாரத்துடன், விருந்து உபசாரம் ஒன்றும் வழங்கப்பட்டது.

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் தலைவர் அஷ்ஷெய்க் ரிஸ்வி முப்தி

04ம் பக்கம்பார்க்க...



# அனுர யாப்பா உட்பட நால்வருக்கு பிணை

குற்றப் புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா உள்ளிட்ட நான்கு சந்தேக நபர்களையும் பிணையில் விடுவிக்க கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

நீண்ட பரிசீலனைக்குப் பிறகு கொழும்பு கூடுதல் நீதவான் ஹர்ஷன கெக்குனாவலவால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# சவூதி அன்பளிப்பாக வழங்கியுள்ள 50 மெ.தொன் பேரீச்சம் பழம்

## பள்ளிகளுக்கு வினியோகிக்க நடவடிக்கை!

எதிர்வரும் ரமழான் நோன்பு காலத்தை முன்னிட்டு சவுதி அரேபியா 50 மெட்ரிக் தொன்

10ம் பக்கம்பார்க்க...



# குறிஞ்சாங்கேணி பாலம் நிர்மாணம்

## 10 மில்லியன் டொலரை வழங்கும் சவூதி

நீண்ட நாட்களாக இழுபறியில் இருந்த

02ம் பக்கம்பார்க்க...

# முஸ்லிம் மீடியா போரத்தினால் இரண்டு நூல்கள் வெளியீடு!

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் ஏற்பாடு செய்துள்ள "உயிர்த்த ஞாயிறு அனர்த்தம் -மறைகரம் வெளிப்பட்டபோது" மற்றும் "நாங்கள் வேறானவர்கள் அல்ல மண்ணின் வேரானவர்கள் -முஸ்லிம்கள் மீது கட்டமைக்கப்பட்ட சந்தேகங்களை களைதல்" ஆகிய இரு

03ம் பக்கம்பார்க்க...

# ஜனாதிபதி, பொலிஸ் ஆணைக்குழு அதிகாரிகள் சந்திப்பு

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்குமிடையில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்த கலந்துரையாடல் நேற்று (22) பிற்பகல் ஜனாதிபதி

02ம் பக்கம்பார்க்க...

# புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள் விரைவில்

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் விரைவில் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

இன்று (23) பாராளுமன்றத்தில் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

புலமைப்பரிசில் பரீட்சையுடன் ஏற்பட்ட நெருக்கடி காரணமாக, பெறுபேறுகளின் மதிப்பீட்டை இடைநிறுத்த நீதிமன்றம் உத்தரவிட்டதால், பெறுபேறுகளை வெளியிடுவதில்

02ம் பக்கம்பார்க்க...

# சகலருக்கும் பொதுவான திருமண வயதெல்லை!



## அமைச்சர் சரோஜா தலைமையில் ஆராய்வு

இலங்கையில் தற்போது பல்வேறு திருமண சட்டங்களுக்கு அமையக் காணப்படும் பல்வேறு திருமண வயதெல்லைகளை பொதுவானதொரு வயதெல்லைக்குள் கொண்டு வருவதற்கான முன்மொழிவுகள் பெறப்படவுள்ளன.

இது தொடர்பாக நேற்று முன்தினம் மகளிர் விவகார அமைச்சர் சரோஜா போல்ராஜ்

02ம் பக்கம்பார்க்க...

# இன்று அல்லது நாளை ஹஜ் கோட்டா வெளியீடு

## 3500 கோட்டாக்கள் 92 முகவர்களிடையே பகிர்வு

இவ்வாண்டின் ஹஜ் கோட்டா விபரங்கள் இன்று அல்லது நாளை வெளியிடப்படும் என முஸ்லிம் சமய

02ம் பக்கம்பார்க்க...

# வானொலி முஸ்லிம் சேவையில் 1000வது குத்பா நேரடி அஞ்சல்

சுனாமி அனர்த்தத்தினைத் தொடர்ந்து இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் கொள்ளுப்பிட்டி ஜும்ஆப் பள்ளியிலிருந்து

03ம் பக்கம்பார்க்க...

# சவூதி தூதரக குர்ஆன் மனனப் போட்டி 24 பேருக்கு கௌரவம்




சவூதி அரேபிய தூதரகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அல் குர்ஆன் மனனப் போட்டி கடந்த திங்கட்கிழமை கொழும்பு கோல்பேஸ் ஹோட்டலில் வெகு விமரிசையாக இடம்பெற்றது.

02ம் பக்கம்பார்க்க...

அமானா வங்கியில் வாகன நிதியுதவி



உங்கள் வாகனத்துக்குரிய சாவியை மிகவும் மலிவான மாதாந்த தவணைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 1,933/-
ரூ.100,000க்கு வாடகை*

- குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரை மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank




## சவூதி...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

ஏறத்தாழ 1500 க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்து கொண்ட இப் போட்டித் தொடரில் வெற்றியீட்டிய 24 பேருக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந் நிகழ்வில் புத்தசாசன கலாச்சார அலுவல்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவி, சவூதி அரேபிய இஸ்லாமிய விவகாரங்கள், தஃவா மற்றும் வழிகாட்டல் அமைச்சின் பிரதிச் செயலாளர் சவூத் ஒலைபா அல் கம்தி, இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் பின் ஹமூத் அல கஹ்தானி உட்பட உலமாக்கள், அரசியல்வாதிகள், வெளிநாட்டு இராஜதந்திரிகள் உட்பட பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

## இன்று...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

கலாச்சார திணைக்களத்தின் பணிப்பாளர் தெரிவித்தார்.

உயர் நீதிமன்ற உத்தரவின் படி ஏற்கனவே தேர்வு செய்யப்பட்ட ஹஜ் கோட்டா ரத்து செய்யப்பட்டதையடுத்து அமைச்சினால் நியமிக்கப்பட்ட ஷாமில் கமிட்டியின் சிபாரிசுகள் இப்போது முஸ்லிம் சமய விவகார திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி ஹஜ் கமிட்டி நாளை அல்லது நாளை மறுதினம் கூடி அது தொடர்பான இறுதி முடிவு எடுக்கும் என முஸ்லிம் சமய கலாச்சார திணைக்களத்தின் பணிப்பாளர் நவாஸ் தெரிவித்தார். 92 முகவர் நிலையங்களுக்கு 3,500 ஹஜ் கோட்டா பகிர்ந்தளிக்கப்பட உள்ளது. கடந்த முறை 88 முகவர் நிலையங்களுக்கு இது வழங்கப்பட்டிருந்தது.

ஹஜ் குழுவின் தலைவர் வெளிநாடு சென்றிருப்பதன் காரணமாக அவர் தாயகம் திரும்பியவுடன் இது பற்றிய இறுதி முடிவு எடுக்கப்படும் என நவாஸ் தெரிவித்தார்.

இம்முறை இலங்கைக்கு சவூதி அரேபியா 3500 கோட்டாக்களையே வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர் நிஸாம் காரியப்பரும் இச் சந்திப்பில் கலந்து கொண்டார்.

## வானொலி...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

ஆரம்பிக்கப்பட்ட குத்பா நேரடி அஞ்சல் ஆயிரத்தை எட்டியுள்ளது. எதிர்வரும் 24 ம் திகதி வெள்ளிக்கிழமை கொள்ளுப்பிட்டி ஜ/ம்ஆப் பள்ளியிலிருந்து ஆயிரமாவது குத்பா உரை நேரடியாக இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் நேரடி அஞ்சல் செய்யப்படவுள்ளது. அன்றைய தினம் குத்பா பிரசங்கத்தை அகில இலங்கை ஜெம்மியதுல் உலமா சபைத் தலைவர் அஷ்ஷெய்க் றிஸ்வி முப்தி நிகழ்த்தவுள்ளார். 2004 ஆம் ஆண்டு ஆரம்பமான முதலாவது குத்பா பிரசங்கத்தையும் அஷ்ஷெய்க் றிஸ்வி முப்தியே நிகழ்த்தியிருந்து குறிப்பிடத்தக்கது.

இந் நேரடி அஞ்சலை வானொலி முஸ்லிம் சேவையின் அப்போதைய கட்டுப்பாட்டாளராகவும், பின்னால் பணிப்பாளராகவும் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் இருந்த எம.இஸட்.அஹமத் முனவ்வர் ஆரம்பித்து வைத்திருந்தார். ஒவ்வொரு வெள்ளியும் பகல் 1.05 க்கு ஆரம்பமாகும் இந் நேரடி அஞ்சலை அன்றிலிருந்து இன்றுவரை முஸ்லிம் சேவையின் சிரேஷ்ட தயாரிப்பாளர் முஹம்மத் றீஸா தொகுத்து வழங்கி வருகிறார். இந்த நேரடி அஞ்சல் சிறப்பாக இடம்பெறுவதற்கு கொள்ளுப்பிட்டி ஜூம்ஆப் பள்ளியின் முன்னாள், இன்னாள் நிர்வாக உறுப்பினர்களின் ஒத்துழைப்பு வழங்கினார்கள்.

## புலமை...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

தாமதம் ஏற்பட்டதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

பெறுபேறுகளுக்காக இவ்வளவு நேரம் எடுத்தது எங்களுக்கு மிகவும் துரதிர்ஷ்டவசமானது. ஆனால் அதற்குக் காரணம், ஐந்தாம் தரப் புலமைப் பரீட்சையில் ஏற்பட்ட நெருக்கடியுடன் எழுந்த நீதிமன்ற உத்தரவின் காரணமாக வினாத்தாள் மதிப்பீட்டை நிறுத்தி வைக்க வேண்டியிருந்தது. அதனை நாங்கள் விரைவில் சரிசெய்வோம் எனத் தெரிவித்தார்.

## சகலருக்கும்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

தலைமையில் நடைபெற்ற பெண் எம்.பீக்களின் கூட்டத்தின் போது ஆராயப்பட்டுள்ளது. இது தொடர்பான முன்மொழிவுகளை சிவில் சமூகம் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்தும் பெற்று வயதெல்லை தொடர்பான இறுதிப் பரிந்துரையை வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.







## குறிஞ்சாங்கேணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிண்ணியா - குறிஞ்சாக்கேணி நிர்மாணப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படடுள்ளது.

சவூதி நிதியுதவின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள இந்த அபிவிருத்தி பணிகளுக்கென திருத்தப்பட்ட ஒப்பந்தத்தில் நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார விவகார அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனவும் சவூதி அபிவிருத்தி நிதியத்தின் பணிப்பாளர் அப்துல் மொஹ்சென் அல் முத்லாவும் கையெழுத்திட்டனர்.

இந்த பாலம் கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவில் உள்ள சுமார் 100,000 மக்களின் பயணத்தையும் வணிக நடவடிக்கைகளையும் எளிதாக்கும் என்று அமைச்சு தெரிவித்துள்ளது.

பேராதனை பதுளை செங்கலடி வீதி அபிவிருத்தி திட்டத்திலிருந்து மீதமுள்ள நிதியை இதற்காகப் பயன்படுத்தப்படவுள்ளது.

1977 ஆம் ஆண்டு கட்டப்பட்ட இப் பாலம் காலப்போக்கில் அரிப்புக்குள்ளாகி அண்மைக்காலமாக இடிந்து விழும் நிலையை அடைந்துள்ளது.

இந்தப் பாலத்தில் கடந்த 2021.11.21 ஆம் திகதியன்று ஐந்து சிறுவர்கள் உட்பட 8 பேர் உயிரிழந்துள்ள சோக சம்பவமொன்றும் பதிவாகியிருந்தது.

இதனைத்தொடர்ந்து இந்த பாலத்தை நிர்மாணித்துத் தருமாறு மக்கள் தொடர்ச்சியாக கவன ஈர்ப்பு போராட்டங்களில் ஈடுபட்டு வந்ததைத் தொடர்ந்து பாலத்தை புனர் நிர்மாணம் செய்வதற்காக கடந்த 2021ஆம் ஆண்டு 226. 7 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் பாலத்தின் கட்டுமான பணிகள் பூர்த்தி செய்யப்படவில்லை.

இந்நிலையிலேயே இந்தப்பாலத்தை சவூதி அபிவிருத்தி நிதியத்தின் உதவியுடன் நிர்மாணிப்பதற்கு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார விவகார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலகத்தில் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இக்கலந்துரையாடலில் பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் ஏனைய உறுப்பினர்கள் கலந்துகொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸில் சில இடமாற்றங்களை மேற்கொள்ள பொலிஸ் ஆணைக்குழு தயக்கம் காட்டுவதாக ஜனாதிபதி அநுரகுமார திஸ ாநாயக்க அண்மையில் மக்கள் சந்திப்பொன்றில் குற்றஞ்சாட்டினார்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பில் ஜனாதிபதிக்கு அறிவிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அரசியலமைப்பு ரீதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக சட்டரீதியாக தமது கடமைகளை மேற்கொண்டு வருவதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழு ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளது.

பொலிஸ் ஆணைக்குழுவின் செயற்பாடுகளை சுயாதீனமாக நடத்துமாறு பணிப்புரை விடுத்துள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, அதன் பணிகளில் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தாது எனவும் உறுதியளித்துள்ளார்.

## முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மொழிபெயர்ப்பு நூல்களின் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் ஜனவரி 30 ஆம் திகதி, வியாழக்கிழமை ,மாலை 5 மணிக்கு கொழும்பு -7இல் அமைந்துள்ள இலங்கை மன்றக் கல்லூரி கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

பேராசிரியர் ராஜன் ஹூல் ஆங்கிலத்தில் எழுதிய **"SRI LANKA'S EASTER TRADEDY .Wheh the deep state gets out of its depth"** என்ற ஆங்கில நூலை முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம். அமீன் பி. ஏ தமிழில் மொழி பெயர்த்துள்ளார் அன்று வெளியிடப்படும் அடுத்த நூல் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் ஆங்கிலத்தில் எழுதி வெளிவந்த **"WE ARE A PART NOT APART -Demystifying Myths Against Muslims of Sri Lanka"** என்ற நூலின் தமிழாக்கம் ஆகும் .

இந்த நூல்கள் இரண்டினதும் ஆய்வுரையை பேராசிரியர் எம்.எஸ். எம் அனஸ் நிகழ்த்துவதோடு, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எம். சுஹைர்,முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன், சிரேஷ்ட ஊடகவியலாளர் மஹிந்த ஹத்தக்க ,முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், என் .எம்.அமீன் ஆகியோரும் உரையாற்றவுள்ளனர்.

இவ்விரு நூல்களும் அண்மை காலத்தில் இலங்கையை உலுக்கிய அதிர்ச்சியான சம்பவங்களையும், அச்சுறுத்தல்களையும் மையமாகக் கொண்டு எழுதப்பட்டவை.



**BYD** நிறுவனத்தின் ஜனாதிபதி அலுவலகத்தின் அரசு விவகாரங்களின் சிரேஷ்ட முகாமையாளர் திருமதி ஷி வென்ஹூய், ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, மற்றும் வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோர் சீனாவில் இடம்பெற்ற முக்கிய சந்திப்பின் போது எடுக்கப்பட்ட புகைப்படம்.

## அல்குர்ஆன் உங்கள் இதயத்துடன் பேசுகிறது....

(இப்னு தவ்பீக் ஆலீம்)

### இருமடங்காக்கப்படும்

”உங்களில் எவரேனும் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் வழிப்பட்டு நற்கருமங்கள் செய்தால் அதற்குரிய கூலியை அவருக்கு நாம் இருமடங்காகத் தருவோம். அன்றி மிக்க கண்ணியமான ஆகாரத்தையும் அவருக்கு நாம் சித்தப்படுத்தி வைத்திருக்கின்றோம்.““ (33:31)

### விசுவாசியான பெண் எப்படி நடக்க வேண்டும்?

”நீங்கள் (அல்லாஹ்வுக்குப்) பயப்பட்டவர்களாயின் (அந்நிய ஆண்களுடன் பேசும் சமயத்தில்) நளினமாகப் பேசாதீர்கள். ஏனென்றால் எவருடைய இருதயத்தில் (பாவ) நோய் இருக்கின்றதோ அவர் தவறான விருப்பங்களைக் கொள்ளக் கூடும். எனவே நீங்கள் (எதைப் பேசிய போதிலும்) நேர்மையாகப் பேசிவிடுங்கள்” (33:32)

”நீங்கள் உங்கள் (வீடுகளிலிருந்து வெளிச் சென்று திரியாது) வீடுகளுக்குள்ளாகத் தங்கியிருங்கள். முன்னிருந்த அறியாத ஜனங்கள் (தங்களை அலங்கரித்துக் கொண்டு வெளியில் சென்று) திரிந்து கொண்டிருந்ததைப் போல் நீங்களும் திரியாதீர்கள். தொழுகையைக் கடைப்பிடித்து ஒழுகுங்கள். ஸக்காத்தும் கொடுங்கள். அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் வழிப்பட்டு நடவுங்கள்.” (33:33)

### அல்லாஹ்வையும் ரஸூலையும் பின்பற்றுதல்

”எவர்கள் (அல்லாஹ்வை) விசுவாசித்து நற்கருமங்களையும் செய்து முஹம்மது நபி (ஸல்) அவர்கள் பேரில் இறக்கப்பெற்றதை அது தங்கள் இறைவனிடமிருந்து வந்த உண்மை (யான வேதம்) என்று விசுவாசித்திருந்தார்களோ, அவர்கள் (அறியாமல் செய்த) தீய செயல்களை அவர்களை விட்டுப் போக்கி, அவர்களுடைய நிலைமையையும் (இறைவன்) சீர்படுத்திவிட்டான்.” (47:2)

“விசுவாசிகளே நீங்கள் அல்லாஹ்வுக்கு உதவிபுரிந்தால், அவனும் உங்களுக்கு உதவிபுரிந்து உங்களுடைய பாதங்களை ஸ்திரப்படுத்திவிடுவான்.” (47:7)

“எவர்கள் (இவ்வேதத்தை) நிராகரிக்கின்றார்களோ, அவர்களுக்குக் கேடுதான். அவர்களுடைய செயல்களையெல்லாம் அவன் பயனற்றதாக்கிவிடுவான்.” (47:8)

மேலும், எவர்கள் நேர்வழியில் செல்கிறார்களோ, அவர்களுடை நேர்வழியை (இன்னும்) அதிகப்படுத்தி, அவர்களுக்கு தக்வாவை – பயபக்தியை (இறைவன்) அளிக்கின்றான்.

“எவர்கள் நேரான வழியில் செல்கின்றார்களோ (அவர்கள்) இவ்வேதத்தை செவியுறுவதன் காரணமாக அவர்களுடைய நேர்மையை (இன்னும் இன்னும்) அதிகப்படுத்திப் பரிசுத்த நன்மையையும் அவர்களுக்கு (அல்லாஹ்) அளிக்கின்றான்” (47:17)



www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2025 JANUARY 23 - THURSDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# அநியாயத்துக்கு துணை நிற்போருக்கு அழகான பாடம் காஸா

மத்திய கிழக்கின் தற்கால மாற்றங்கள் வரலாற்று முக்கியத்துவம் மிக்க மாற்றங்களாக காணப்படுகின்றன. இஸ்ரேலுக்கும் ஹமாஸ/க்கும் இடையிலான போராட்டமானது ஒரு வருடங்களுக்கு மேலாக நடைபெற்று தற்போது தற்காலிக யுத்த நிறுத்தம் ஏற்பட்டுள்ளமையை மனித சமூகத்திற்கு கிடைத்த மாபெரும் வெற்றியாக கருத முடியும். ஏனெனில் மக்கள் படும் துன்பங்கள் அவர்களது இன்னல்கள் மறைகின்றது என்பது எந்த ஒரு மனிதனுக்கும் மிகவும் மகிழ்ச்சியான விடயமாகும்.

இந்த போராட்டத்தின் போது காஸாவினுடைய குடியிருப்புகள் முற்று முழுதாக அழிக்கப்பட்டு அதன் அனைத்து குடியிருப்புகளிலும் இருந்த மக்கள் அனேகமாக பல பகுதிகளுக்கும் இடம்பெயர்க்கப்பட்டனர். மிகவும் சிறிய நிலப்பரப்பில் இவ்வாறானதொரு போராட்டத்தை எவ்வாறு கொண்டு சென்றனர் என்பது பலராலும் மிக ஆச்சரியமாக பார்க்கப்படுகிற ஒரு விடயமாக காணப்படுகிறது. குறிப்பாக இஸ்ரேலிய படைகளால் சுற்றி வளைக்கப்பட்டு அழிக்கப்பட்டதாக நினைத்த ஹமாஸ் அமைப்பு, புற்றிலிருந்து இருந்து ஈசல்கள் வெளி வருவதைப் போன்று ஆயிரக்கணக்கில் புத்தம்புதிய இராணுவ சீருடைகளுடன் வெளிவந்தமையானது உலகத்தை மெய்சிலிர்க்க வைத்துள்ளது. இவர்கள் இதுவரை காலமும் எங்கிருந்தார்கள் எவ்வாறு போராடினார்கள் இஸ்ரேலிய படைகள் எவ்வளவு பெரிய பொறியில் மாட்டி இருந்தார்கள் என்பதை இப்பொழுது தான் உலகம் வியப்புடன் திரும்பி பார்க்கிறது. இதனை ஒரு வெற்றியாக கருதினாலும் மக்கள் இதுவரை காலமும் மிகப்பெரும் துன்பத்தை எதிர்நோக்கி உள்ளனர். அந்த துன்பத்திலிருந்து மீள அவர்களுக்கு பல வருடங்கள் எடுக்கும். அதே நேரம் இந்த யுத்த நிறுத்தம் தற்காலிகமானது. எந்த நேரமும் மீண்டும் பாரிய யுத்த நிலைமைகள் உருவாகலாம் என்ற ஒரு அச்சம் காணப்பட்டாலும் இப்பொழுது காணப்படக்கூடிய உலக அரசியல் நிலைமைகள், குறிப்பாக டொனால்ட் ட்ரம்ப் ஆட்சிக்கு வந்தமையும் அதேபோன்று அமெரிக்காவில் ஏற்பட்ட காட்டுத்தீ பரவல் போன்ற இவ்வாறான நிலைமைகளின் போது, யூதர்களுடைய பொருளாதாரம் பரவலாக பாதிக்கப்பட்ட நிலையில் இஸ்ரேலுக்கு மீண்டும் ஒரு யுத்தத்தை ஆரம்பிப்பது என்பது மிகவும் கடினமான ஒரு விடயமாக இருக்கும் என்பதை அனுமானித்துக் கொள்ள முடிகிறது.

குறிப்பாக டமஸ்கஸ்ஸை வெற்றி கொண்டதன் பின்பு துருக்கியினுடைய டமஸ்கஸ் பிரவேசம் அல்லது சிரிய பிரவேசம் மற்றும் துருக்கி இராணுவம் அங்கு நிலை கொள்வதென்பது இஸ்ரேலைப் பொருத்தமட்டில் அச்சம் கொள்ள செய்திருக்கிறது. துருக்கி எப்போதும் பலஸ்தீன போராட்டத்திற்கு இராஜதந்திர ரீதியான ஆதரவுக்காக உலகளாவிய அளவில் குரல் கொடுத்து வருகின்றது. சில ஆய்வாளர்கள் அடுத்த யுத்தம் ஒன்று வருகின்ற போது துருக்கியினுடைய ட்ரோன்கள் பெருமளவுக்கு பயன்படுத்தப்படுகின்ற போது இஸ்ரேல் மிகவும் சிக்கலான நிலையை எதிர்கொள்ள வேண்டி வரும் என எச்சரிக்கை விடுத்துள்ளனர். இஸ்ரேலை பொருத்தமட்டில் இது வாழ்வா சாவா போராட்டமாகவே பார்க்கப்பட்டது. அவர்கள் இயன்ற வரை ஹமாஸை அழிப்பதற்கான மொத்த முயற்சிகளையும் செய்தாலும் இறுதியில் அவர்களுடைய முயற்சி தோல்வி அடைந்துள்ளது. உலகளாவிய அளவில் இஸ்ரேல் மிகப்பெரிய பின்னடைவை எதிர் கொண்டிருக்கின்றமையை கருத்தில் கொள்கின்ற போது உலகளாவிய பொருளாதாரம் மிகப்பெரிய சவாலை எதிர்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. பொருளாதார அரசியல் ரீதியாக உலகம் ஒரு புது வடிவத்தை எடுத்திருப்பதாக பல அரசியல் இராணுவ ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இந்த நிகழ்வின் போது உலகளாவிய மக்கள் நீதியின் பக்கமும் நேர்மையின் பக்கமும் இருந்தமை உலகளாவிய மனசாட்சியை எடுத்துக்காட்டுவதோடு ஒரு அநியாயத்துக்கு துணை நிற்பவர்களுக்கு என்ன நடக்கும் என்பதற்கான பாடத்தை இறைவன் அழகாக நிகழ்த்திக்காட்டியிருப்பதாக பலரும் கருத்து தெரிவிக்கின்றனர்.

# Amys முகாமைத்துவ பணிப்பாளர், பானகல உபதிஸ்ஸ தேரர் சந்திப்பு



இலங்கை மகபோதி சங்கத்தின் தலைவர் சங்கைக்குரிய பானகல உபதிஸ்ஸ நாயக்க தேரர் அவர்களுடனான சந்திப்பின் போது எடுக்கபட்ட புகைப்படத்தில் AMYS நிறுவத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம். தாஸீம், பிரதிப் பணிப்பாளர் ஏ.ஜே.எம் வாரித் மற்றும் பாலித தேரர் ஆகியோரைக் காணலாம்.

## முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையில் இடம்பெற்ற இந்த விருந்து உபசாரத்தின் போது ஜே வி பி சார்பில் பிரதி அமைச்சர் முனீர் முழப்பர் தவிர்த்த சகல உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

எதிர்க்கட்சித் தரப்பில் 4 பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே கலந்து கொண்டனர். பாராளுமன்றத்தில் இருக்கின்ற முஸ்லிம் உறுப்பினர்கள் சகலரும் முதன்முறையாக ஒன்றாக சந்தித்த ஒரு நிகழ்வாக இது அமைந்தது.

ஒவ்வொருவரும் தம்மை அறிமுகம் செய்து கொண்டதோடு, முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் சம்பந்தமாகவும் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தலைமையிலான கட்சியின் அங்கத்தவர்கள் சகலரும் கலந்து கொண்ட போதும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் மட்டுமே கலந்து கொண்டார்.

ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் திருமலை மாவட்ட எம்.பி. இம்ரான் மஹ்ரூப் மட்டுமே கலந்து கொண்டார். பொதுவாக அறிமுக நிகழ்வாகவே இது ஏற்பாடு செய்யப்பட்டதாக ஜம்இய்யதுல் உலமாவின் தலைவர் தெரிவித்தார். எதிர்காலத்தில் ஜம்இய்யதுல் உலமா எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் பற்றி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. எதிர்காலத்தில் ஜம்இய்யத்துல் உலமாவினுடைய பணிகளை முழுமையாக விளக்குவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை பெற்று தருமாறு ஜம்இய்யத்துல் உலமாவின் செயலாளர் அர்க்கம் நூரமிட் வேண்டுகோள் விடுத்தார்.



# பேதங்களை மறந்து சமூக எழுச்சிக்காக ஒன்று திரள வேண்டும்

## சிரேஷ்ட சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸ்

**( ரஷீத் எம். றியாழ்)**

"பேதங்களை மறந்து சமூக எழுச்சிக்காக ஒன்று திரள வேண்டியது காலத்தின் தேவையாகும்" என்று. தேசிய சூரா சபையின் பொதுச் செயலாளரும் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் பொதுச் செயலாளருமான சிரேஷ்ட சட்டத்தரணி கலாபூஷணம் ரஷீத் எம். இம்தியாஸ் தெரிவித்தார்.

கண்டி கல்வி வலயத்தைச் சேர்ந்த உடுதெனிய முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த சனிக்கிழமை (18) வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.



அதிபர் ஏ. ஜி. ஏ. ஹபீல் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவுக்கு. கண்டி வலயக் கல்விப் பணிப்பாளர். டி. சி. ஐ அந்தரகே பிரதம அதிதியாக கலந்து கொண்டார். இங்கு கௌரவ அதிதியாகக் கலந்து கொண்ட சிரேஷ்ட சட்டத்தரணி கலாபூஷணம் ரஷீத் எம். இம்தியாஸ் தனது உரையில் மேலும் கூறியதாவது.

"ஒரு ஊரின் முன்னேற்றத்தில். இடையூறாக இருக்கின்ற ஆமைகள் களையப்பட வேண்டும். பொறாமை ஒன்று சேராமை ஒத்துழைக்காமை. விட்டுக் கொடுக்காமை முதலான பல ஆமைகள் ஒரு ஊரின் முன்னேற்றத்திற்கு தடையாக அமைகின்றது. இவற்றை களையும் போதுதான் அந்த ஊர் முன்னேற்றம் காணும் என்பது எனது நம்பிக்கை.

உடுதெனிய முஸ்லிம் மகா வித்தியாலத்தில் கல்வி கற்ற மாணவர்கள். கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையிலும் உயர்தரப் பரீட்சைகளிலும் சிறந்த பெறுபேறுகளையும் பெற்றுக் கொண்டது மட்டுமல்லாமல் தேசிய ரீதியான போட்டிகளிலும் வெற்றி பெற்று சாதனை படைத்திருப்பது எமக்கெல்லாம் பேருவகை தருகிறது.

இத்தகைய சிறந்த பெறுபேறுகளை பெற்றுக் கொடுப்பதற்கும் மாணவர்களின் ஆளுமையை வளர்ப்பதற்கும் அரும்பாடுபட்ட ஆசிரியர்கள், அதிபர் உட்பட பாடசாலையின் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் அனைவரையும் பாராட்டுகிறேன் என தெரிவித்தார்.

# சீனன்கோட்டை ஷாதுலிய்யா கலா பீடத்தில் புது மாணவர் வரவேற்பு நிகழ்வு





**( பீ.எம் முக்தார்)**

பேருவளை சீனன்கோட்டை அல்-ஜாமியத்துல் பாஸியத்துஷ் ஷாலுலிய்யா கலாபீடத்தில் புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வும், பரீட்சையில் சித்தாயடைந்த மாணவர்களுக்கு பரிசளிக்கும் வைபவமும் கலாபீட பாஸிய்யா மண்டபத்தில் கடந்த 19ஆம் திகதி நடைபெற்றது.

அதிபர் மௌலவி. அல் உஸ்தாத் எம். அஸ்மிகான் (முஅய்யிதி) தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கலாபீட சிரேஷ்ட விரிவுரையாளர் மௌலவி எம். என் முஹம்மத் அகீல் (ஹஸனி - அல் காதிரி பீ.ஏ) வரவேற்புரை நிகழ்த்தினார்.

கலாபீட இணைப் பொருளாளரும், சீனன்கோட்டை பள்ளிச் சங்க உறுப்பினருமான அல்-ஹாஜ் எம். முஸ்னி உவைஸ், நிர்வாக சபை உறுப்பினரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான அல்-ஹாஜ் பீ. எம் முக்தார், கலாபீட விரிவுரையாளர்களான அல் உஸ்தாத் மௌலவி எம். ஏ அப்துல்லாஹ் அமீன் (நுலாரி), மௌலவி எம்.ஆர் ரஜீன் (அஷ்ஷாதுலி), உஸ்மான்கந்த ஸாவியா மஸ்ஜிதின் பிரதம இமாம் மௌலவி எம்.எம் அஷ்கர் (அஸ்வாதி) ஆகியோர் நிகழ்வில் பங்கு பற்றினர்.

பரீட்சையில் சித்தியடைந்த



மாணவர்களுக்கும், ஹிப்ழ் பிரிவில் புனித அல்குர்ஆனை மனனம் செய்யும் மாணவர் களுக்கும் இதன் போது பரிசில்களும் வழங்கப்பட்டன. மாணவர்களின் கல்வி நிலை, எதிர்கால திட்டங்கள், பெற்றோர்களின் பங்களிப்பு குறித்து அதிபர் இங்கு தெளிவாக எடுத்துக் கூறினார்.

# கற்பிட்டி தில்லையூர், தேத்தாவாடி

## கிராமத்திற்கான பிரதான வீதியின் அவலநிலை



**( எம்.எச்.எம்.சியாஜ் - றிஸ்வி ஹுசைன், எம்.யூ.எம்.சனூன்)**

கற்பிட்டி தில்லையூர் - தேத்தாவாடி கிராமத்தின் கற்பிட்டி நகரில் இருந்து தில்லையூர் மற்றும் தேத்தாவாடி ஆகிய கிராமங்களுக்கு செல்லும் பிரதான வீதி சிறிய மழையின் போதும் நீரில் மூழ்கிவிடும் நிலையில் காணப்படுகிறது .

இக்கிராம மக்கள் தமது அத்தியாவசிய தேவைகள் நிமித்தம் அன்றாடம் கற்பிட்டி நகருக்கு பயணம் செய்யக்கூடிய ஒரே ஒரு பிரதான வீதியாக காணப்படுவதுடன் உல்லாச ஹோட்டல்களுக்கும் இவ் வீதியே பயன்படுத்தப்படுகிறது.

இவ் வீதி புணரமைப்பு செய்யப்பட வேண்டும் என்பதுடன் தில்லையூர் கிராமத்தில் காணப்படும் கனிஷ்ட பாடசாலைக்கு அயல் பகுதி மாணவர்கள் பயண்படுத்தும் இவ் வீதி நீரில் முழ்கிவிடுவதனால் மாணவர்களும் பாடசாலை ஆசிரியர்களும் பொது மக்களும் நீரில் இறங்கி செல்ல வேண்டிய நிலையே காணப்படுகின்றது.

இவ்வாறு இவ் வீதி சிறிய மழையின் போது மழை வெள்ளம் மற்றும் கடல் வெள்ளம் என்பவற்றினால் நீரில் முழங்கி விடுவதற்கான பிரதான காரணியாக காணப்படுவது அருகில் இருந்த நீரோடையை நிரப்பி சரியாக திட்டமிடப்படாமல் முன்னாள் கற்பிட்டி பிரதேச சபைத் தலைவரினால் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டு மைதானம். என இக்கிராம மக்கள் தமது அதிர்ப்த்தியை வெளியிடுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# டிப்ளோமா மற்றும் சான்றிதழ் கற்கைகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு!







**( எம்.எம். முர்ஷித்)**

இலங்கை கிழக்குப் பல்கலைகழகத்தின் வெளிவாரிப் பட்டப்படிப்புகள் மற்றும் விரிவாக்கல் கற்றல்கள் நிலையத்தினால் நடாத்தப்பட்ட டிப்ளோமா மற்றும் சான்றிதழ் கற்கைகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு (18) திகதி சனிக்கிழமை கிழக்குப் பல்கலைக்கழக மட்டக்களப்பு தொழில்நுட்ப பூங்கா கேட்போர் கூடத்தில் நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் எஸ்.ஜெயராசா தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் "விவசாயத்தில்" 60 பேரும் "தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் 16 பேரும் "ஆய்வுக்கூட தொழில்நுட்பத் தில்" 04 பேரும் "பன்மைத்துவம் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய சேவை வழங்கலின் மூலம் அமைதியை பேணுதல்" பாட நெறியில் 09 பேரும் டிப்ளேமா சான்றிதழ்களை, இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த கிழக்குப் பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டனர்.

இந் நிகழ்வில் கிழக்கு பல்கலைக்கழக திருகோணமலை வளாக முதல்வர், பல்கலைக்கழக பீடாதிபதிகள் கல்வி சார், சாரா ஊழியர்கள் என பலரும் கலந்து சிறப்பித்துள்ளனர்.

# பாலஸ்தீன மக்கள் விடுதலையை சுவைக்கும் காலம் நெருங்கி வருகிறது...



எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

சொந்த நிலத்தை பறித்து அவர்களின் உரிமைகளை நசுக்கி பல்லாயிரக்கணக்கான மக்களை நாம் இந்த நாகரீகமான உலகத்தில் காண்பது என்பது அபூர்வமான அதிர்ச்சிகரமான நிகழ்வு என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க வாய்ப்பே இல்லை.

உலகின் மிகப்பெரிய அளவில் ஆன மனித இன படுகொலைகள் நடைபெற்ற காசாவில் தற்போது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட காஸா போர்நிறுத்தம் தற்போது அமலுக்கு வந்தது. இந்தநிலையில் இஸ்ரேல் பணயக்கைதிகளை செஞ்சிலுவை சங்க பணியாளர்களிடம் ஹமாஸ் ஒப்படைத்தது. இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக சர்வதேச அளவில் பார்க்கப்படுகிறது. இந்த வரலாற்று ரீதியான சம்பவம் மிகவும் மகிழ்ச்சி மற்றும் எழுச்சியை ஏற்படுத்தியது என்பதே உண்மையாகும்.

நவீன உபகரணங்கள், டாங்கிகள், உளவுத்துறை, நவீன வடிவமைப்பு செய்யப்பட வான் படையினரின் தாக்குதல், கொடூரமான கொத்து கொத்தாக குண்டு வீச்சு என எல்லாவற்றையும் தகர்த்து எரிந்து உலகின் மாபெரும் ராணுவத்தை படு தோல்வியடைய வைத்துள்ளது என்பதே உண்மையாகும்.

அதேநேரத்தில் பிணைக் கைதிகள் பரிமாற்றம் முதலில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் சற்று தாமதமாக நடந்த நிலையில் இஸ்ரேலிய ராணுவம் உடனடியாக தாக்குதலை நடத்திய நிலையில் 19 பேர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள் .போர் நிறுத்தம் அறிவிப்பு செய்யப்பட்ட நிலையில் 123 அப்பாவி மக்களை யூத சியோனிச ராணுவம் வான் படையினர் மூலம் குண்டுகளை வீசி படுகொலை செய்தது சர்வதேச சமூகத்தை அதிர்ச்சி அடைய செய்துள்ளது என்பதே உண்மையாகும்.

இஸ்ரேலிய அரசும் அதன் ராணுவ பிரிவின் சார்பில் கத்தாரில் நடைபெற்ற போர் நிறுத்தம் ஒப்பந்தத்தில் பல்வேறு விதமான கருத்துக்கள் பறிமாறிக் கொள்ளப்பட்ட நிலையில் கத்தார் பிரதமர் முஹம்மது பின் அப்துர்ரஹ்மான் அல் தாணி மிகப் பெரிய அளவில் ஆன பங்கு பணிகளை செய்ததை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள முடிகிறது. இந்த போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு அமெரிக்காவின் புதிய அதிபர் டொனால்ட் ட்ரம்ப் மிகப் பெரிய அளவில் ஆன பங்கு பணிகளை தங்கள் நாட்டு இன்டெலிஜன் அமைப்புக்கள் மூலம் எடுத்தாக நம்பப்படுகிறது. அதே சமயம் இஸ்ரேல், அமெரிக்கா, எகிப்து மற்றும் கத்தார் நாட்டின் உளவுத்துறை தலைவர்கள் இந்த சமாதானம் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டு உடன்பாடு ஏற்பட காரணமாக அமைந்தது என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

முதற் கட்டமாக விடுவிக்கப்படும் ஒவ்வொரு இஸ்ரேலிய பிணை கைதிகளுக்கும் பகரமாக பாலஸ்தீன சிறை கைதிகளில் இருந்து 30 பேரை விடுதலை செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் இந்த கைதிகள் பரிமாற்றம் நடைப்பெற்றது.

இதன் அடிப்படையில் இஸ்ரேலிய பிணை கைதிகள் ரொமிகோனேன்(24), டோரோன் ஸ்டெய்ன்பிரெச்சர்(31) மற்றும் எமிலி டமாரி (28) ஆகிய மூன்று பணயக்கைதிகள் இடம் மிகப் பெரிய அளவில் ஆன ஆரவாரத்துடன் செஞ்சிலுவை சங்க அமைப்பின் மூலம் ஒப்படைக்கப்பட்டனர்.இந்த சம்பவத்தை முதலில் செஞ்சிலுவை சங்கம் உறுதிப்படுத்தியது. அதேநேரத்தில் காஸாவில் உள்ளூர் நேரப்படி 19 ந் தேதி காலை 11:15 மணி முதல் போர்நிறுத்தம் தொடங்கியது என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் அலுவலகம் தெரிவித்திருந்தது.இதன்படி இஸ்ரேலுக்கும் ஹமாஸ்/க்கும் இடையிலான சண்டை நிறுத்தப்படும். மேலும் ஹமாஸால் பிடிக்கப்பட்ட இஸ்ரேலிய பணயக்கைதிகள், இஸ்ரேல் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள பாலத்தீன கைதிகளுக்கு ஈடாக, ஒவ்வொரு கட்டமாக விடுவிக்கப்படுவார்கள்

போர் நிறுத்த ஒப்பந்தத்தின்படி விடுவிக்கப்படும் ஒவ்வொரு இஸ்ரேலிய பணயக்கைதிக்கும், 30 பாலத்தீனிய கைதிகள் இஸ்ரேல் சிறைகளில் இருந்து விடுவிக்கப்படுவார்கள் என நாம் கூறியுள்ள ஒப்பந்த வாசகங்களை ஹமாஸ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது அல்லது உறுதிப்படுத்தியது.

அதாவது 19 ந் தேதி கடந்த ஞாயிற்றுக்கிழமை உள்ளூர் நேரப்படி காலை 8.30 மணிக்கே போர்நிறுத்தம் அமலுக்கு வந்திருக்க வேண்டும். ஆனால், பணயக்கைதிகளில் பெயர் பட்டியலை குறிப்பிட்ட நேரத்திற்கு ஹமாஸ் வழங்காததால், போர்நிறுத்தத்தை அமல்படுத்துவதை இஸ்ரேல் தாமதப்படுத்தியது. இதனால் சற்று பதட்டமான சூழ்நிலை உருவாக காரணமாக அமைந்தது என்பதை நாம் புரிந்து கொள்ள கூடியதாக இருக்கிறது.இந்தநிலையில், முதலில் விடுவிக்கப்பட உள்ள மூன்று பணயக்கைதிகளில் பெயரை ஹமாஸ் காலை வெளியிட்டது. அதன் பின்னர் மற்ற பணிகள் சுணக்கம் இல்லாமல் சுறுசுறுப்பாக நடைபெற்றதாக அறிந்து கொள்ள முடிகிறது.

அதேநேரத்தில் இதற்கிடையே, போர் சார்ந்த ராணுவம் நடத்திய ஈவு இரக்கம் இல்லாத தாக்குதல் மூலம் 70 சதவீதமான குழந்தைகள் மற்றும் பெண்கள் மற்றுமே படுகொலை செய்யப்பட்டார்கள் என்பதை நிகழ்வுகள் உறுதிபடுத்தும் வகையில் அமைந்துள்ளது.

சொந்த பிள்ளைகளை, இளம் பெண் மற்றும் வலிமையான வாலிபர்கள் பெண்கள் என்ற அடிப்படையில் ஏராளமான பொதுமக்கள் கொண்டு குவிக்கப்பட்ட நிலையில் ஹமாஸ் இயக்கத்தின் தலைவர்கள் இந்த அளவுக்கு எழுச்சி மிகுந்த ஆர்பாட்டம் நிறைந்த கொண்டாட்டங்களை நடத்த முடிந்தது என்பதற்கு பதில் இஸ்ரேலிய அரசும் அதன் ராணுவ தலைமையும் தான் சொல்ல வேண்டும்.ஆனால் அவர்கள் இதுவரை மொளனியாக இருப்பதை காணும் போது அவர்கள் எந்தவொரு அளவுக்கு வலு இழந்த நிலமைக்கு தள்ளப்பட்டு உள்ளனர் ஒப்புதல் அளித்ததாக அமைச்சரவைக் கூட்டத்திற்குப் பிறகு பிரதமர் அலுவலகம் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

காஸா போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு ஆதரவாக இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சரவை வாக்களித்ததைத் தொடர்ந்து (ஜன. 17) அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் 24 அமைச்சர்கள் பணயக்கைதிகள் விடுவிப்புக்கு ஆதரவாகவும், 8 பேர் எதிராகவும் வாக்களித்தனர்.

பெஞ்சமின் நிதான்யாகு தோல்வியை தழுவி உள்ளார் என்று வெளிப்படையாக கருத்து தெரிவித்து வருகின்றனர் .ஈத்தாமர் பென் கேவிர் போன்றவர்கள் நெதர்லாந்து அமைச்சரவையில் இருந்து வெளியேறி விட்ட நிலையில் இஸ்ரேலிய அரசும் அதன் தலைமையும் தற்போது நம்பகத்தன்மை இழந்து இருப்பதாக நம்பப்படுகிறது. ஆக ஹமாஸ் இயக்கத்தின் ஆரவாரமான நடவடிக்கைகள் அமைந்து இருந்தது என்பதை நாம் காண கூடியதாக உள்ளது.

இஸ்ரேல் இந்த போர் ஆரம்பித்தபோது மூன்று காரணங்களை அவர்கள் வரிசைப்படுத்திய நிலையில் அந்த 3 காரணங்களும் இன்று வரை இஸ்ரேலிய ராணுவம் மற்றும் அதன் சார்பு படைகளால் நிலை நிறுத்திக் வெற்றி காண முடியவில்லை என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

முதலாவது நாங்கள் பிணை கைதிகள் முழுமையாக விடுதலை செய்வோம்.... இரண்டாவது ஹாமாஸ் தீவிரவாதிகளை முழுமையாக அழித்து ஒழித்து கட்டுவோம். மூன்றாவது, காசா முழுமையாக இஸ்ரேலிய ராணுவ ஆட்சி கீழ் கொண்டு வரப்படும் என்று கொக்கரித்து கொண்டு போர் பிரகடனம் செய்த பெஞ்சமின் நிதான்யாகு கடைசியில் எந்தவொரு சாதனையும் புரியாமல் பல இலட்சக்கணக்கான கோடி ரூபாய் அளவுக்கு நஷ்டத்தை சந்தித்து, பல்லாயிரக்கணக்கான வீரர்களை இழந்து, சர்வதேச நீதிமன்றத்தில் குற்றவாளியாக நிற்கும் சூழ் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார் என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள முடிகிறது.

2023 அக்டோபர் 7 தேதி தொடங்கிய இந்த போர் தற்போதைய நிலையில் 470 நாட்களில் சமாதானம் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டுள்ளது.அதே சமயம் இஸ்ரேலிய அரசும் அதிதீவிர வலதுசாரி அமைச்சர் ஈத்தாமர் பென் கேவிர் ( தேசிய பாதுகாப்பு துறை) மற்றும் ஸ்மோட் ரீச் போன்ற கடும் போக்கு அரசியல் தலைவர்கள் தற்போது பெஞ்சமின் நிதான்யாகு தோல்வியை தழுவி உள்ளார் என்று வெளிப்படையாக கருத்து தெரிவித்து வருகின்றனர் .ஈத்தாமர் பென் கேவிர் போன்றவர்கள் நெதர்லாந்து அமைச்சரவையில் இருந்து வெளியேறி விட்ட நிலையில் இஸ்ரேலிய அரசும் அதன் தலைமையும் தற்போது நம்பகத்தன்மை இழந்து இருப்பதாக நம்பப்படுகிறது. ஆக யூத சியோனிச கடும் போக்கு அரசியல்



நிறுத்த ஒப்பந்தத்தின் முதல் கட்டத்தின் ஒரு பகுதியாக 33 பணயக்கைதிகள் விடுவிக்கப்பட உள்ளதாக கூறியுள்ள இஸ்ரேல், அவர்களின் பெயர் மற்றும் புகைப்படங்களை வெளியிட்டுள்ளது. இந்த புகைப்படங்கள் மற்றும் அவர்களின் பெயர்கள் மூலம் இந்த நிகழ்வுகள் தடை இல்லாமல் நடைபெற வேண்டும் என்று மனித உரிமைகள் சார்ந்த அணைத்து மக்களும் எதிர் பார்த்து காத்திருந்தது என்பதே யதார்த்தமான நிலையாகும்.

அதேநேரத்தில் இஸ்ரேல் வெளியிட்ட பட்டியலில், அக்டோபர் 7ஆம் தேதி ஹமாஸால் பிடிக்கப்பட்ட மிக இளைய மற்றும் மூத்த பணயக்கைதிகள் இடம்பெற்றுள்ளனர்.அவர்களிலா கஃபிர் பிபாஸ் பணயக்கைதியாக பிடிக்கப்பட்டபோது ஒன்பது மாதக் குழந்தை. தனது இரண்டு பிறந்தநாளை பணயக்கைதியாக அந்த குழந்தை கழித்தது அதேநேரத்தில். 86 வயதான ஷ்லோமோ மன்ட்சூர், கடத்தப்பட்ட மிக வயதான பணயக்கைதி ஆவார். போர் நிறுத்தம் அமலுக்கு வரும் சில மணிநேரத்திற்கு முன்புவரை கூட, இஸ்ரேல் காஸா மீது தாக்குதல்களைத் தொடர்ந்தது. இந்த தாக்குதலில் இன்று காலை முதல் 19 பேர் உயிரிழந்துள்ளதாக ஹமாஸ் தெரிவித்துள்ளது.இந்த சம்பவத்தை பார்க்கும் யாராக இருந்தாலும் இஸ்ரேலிய ராணுவம் மற்றும் அதன் அரசு பிரதிநிதிகள் எப்படிபட்ட மனிநிலைக்கு சொந்தக் காரர்கள் என்பதை நாம் புரிந்து கொள்ள அதிகம் நேரம் தேவைப்படாது என்பதை தெளிவாக புரிந்து கொள்ள முடிகிறது.

காசாவில் இதுவரை நடைபெற்ற போரில் அதாவது 470 நாட்களில் 47,600 பாலஸ்தீன பொதுமக்களில் பெரும்பாலான பெண்கள், குழந்தைகள் மற்றும் வயது முதிர்ந்தவர்கள் தான் என்று நாம் அறிந்து கொள்ள கூடியதாக உள்ளது. இந்த மனித இன படுகொலைகள் மூலம் இஸ்ரேலிய யூத சியோனிசம் சார்ந்த கடும்போக்கு வாதம் மற்றும் இனவாத வன்முறைகளை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. யூத சியோனிசம் என்பது நாம் புரிந்து கொள்ள அதிகம் காலம் தேவையில்லை என்பதே யதார்த்தமான நிலையாகும். ஆனால் இஸ்ரேலிய ராணுவம் மற்றும் அதன் தலைவர்கள் இன்றும் வாய்திறந்து பேச ஏன் மறுக்க வேண்டும் என்ற கேள்வியை அவர்கள் எந்த நிலையிலும் தவிர்க்க முடியாத ஒன்றாக மாறி போனது என்பதே உண்மையாகும்.

இந்தப் பட்டியலில் உள்ள பல கைதிகள் பலர் இஸ்ரேல் அரசாங்கத்தால் கொலைக் குற்றவாளிகள் என்று கூறப்படும் நிலையில், 12 இஸ்ரேலியர்களைக் கொன்றதற்காக 13 ஆயுள் தண்டனை அனுபவித்து வந்த அகமது பர்கௌதி மற்றும் 2003 ஆம் ஆண்டு ஜெருசலேமில் நடந்த தற்கொலை குண்டுவெடிப்பில் 23 பேர் கொல்லப்பட்டதற்காக 23 ஆயுள் தண்டனையும் 50 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட மஜ்தி ஜாதாரி ஆகியோர் இந்தப் பட்டியலில் அடங்குவர் என்று இஸ்ரேல் குறிப்பிட்டுள்ளது.

மேலும், 2001 ஆம் ஆண்டு ஹைஃபாவில் பேருந்தில் நடந்த தற்கொலை குண்டுவெடிப்புத் தாக்குதலில் 15 பேர் கொல்லப்பட்டதற்காக 16 ஆயுள் தண்டனை அனுபவித்து வந்த மூத்த ஹமாஸ் உறுப்பினர் சலீம் ஹஜ்ஜா, 13 இஸ்ரேலியர்களைக் கொன்றதற்காக 13 ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட தான்சிம் அமைப்பின் மூத்த உறுப்பினர் முகமது நைஃபா ஆகியோரும் விடுவிக்கப்பட உள்ளனர்.

இந்தப் பட்டியலில் அல்-அக்ஸா தியாகிகள் அமைப்பின் தளபதி சகாரியா சுபைதியும் விடுவிக்கப்பட இருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.இஸ்ரேலிய குடிமக்கள், குறிப்பாக பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் குறிப்பிட்ட சில கைதிகளின் விடுதலையை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காஸாவில் பிடித்து வைக்கப்பட்டுள்ள இஸ்ரேலிய பணயக்கைதிகளை விடுவிப்பதை நோக்கமாகக் கொண்டு போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு இஸ்ரேலிய அரசாங்கம்

யூத சியோனிச கடும் போக்கு அரசியல் தலைவர்கள் பெஞ்சமின் நிதான்யாகு வின் அரசு 42 நாட்களுக்கு பிறகு போரை தொடர்ந்து நடத்த வேண்டும் என நிர்பந்தம் செய்து வரும் நிலையில் மீண்டும் ஒரு போர் தொடங்கும் சாத்தியக்கூறு குறித்து பல்வேறு கருத்துக்கள் வெளியாகியுள்ளன.

இஸ்ரேல் சிறைகளிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள், மேற்கு கரை மற்றும் ஜெருசலேம் பகுதிகளை சேர்ந்த 69 பெண்கள் மற்றும் 21 பதின்பருவ ஆண்கள் என்று ஹமாஸ் தெரிவித்துள்ளது.இதற்கிடையில் இந்த போர் நிறுத்தம் ஏற்படுவதற்கு டிரம்ப் தான் காரணம் என்று புதிதாக பொறுப்பேற்கவுள்ள அமெரிக்க மத்திய கிழக்கு தூதர் ஸ்டீவ் விட்காஃப் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் அரசு தனது இறுதிக்கட்ட தயக்கங்களை தள்ளி வைத்து விட்டு, போர் நிறுத்தத்துக்கு ஒப்புக்கொண்டதற்கு ஸ்டீவ் விட்காஃப் மற்றும் டிரம்ப் ஆகியோரின் தலையீடு முக்கியமானதாக பார்க்கப்படுகிறது. இந்த ஒப்பந்தம் மூலம் விடுவிக்கப்பட்ட மூன்று பணயக்கைதிகளின் புகைப்படங்களை எனது செல்போனில் பார்க்கிறேன், இதற்கு அதிபர் தான் பொறுப்பு, விடுவிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினரை போல, நாம் எல்லோரும் அவருக்கு கடன் பட்டிருக்கிறோம்” என்று அமெரிக்காவின் காபிடல் அரேனா பகுதியில் பேசும்போது தெரிவித்தார்.

இதற்கிடையில் விடுவிக்கப்பட்ட பாலத்தீனர்களை வரவேற்பதற்காக மேற்கு கரையில் ஞாயிற்றுக்கிழமை முழுவதும் மக்கள் காத்துக் கொண்டிருந்தனர். அதிகாலை 2 மணிக்கு, பாலத்தீனர்களை கூட்டி வந்த பேருந்து பெய்டியூனியா என்ற நகருக்குள் நுழைந்த போது, அங்கிருந்த மக்கள் சந்தோசத்தில் கூச்சலிட்டனர், தங்கள் கார்களின் ஹாரன்களை சத்தமாக ஒலித்து தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

இந்த போர் காரணமாக பல்லாயிரக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள் என்பதை உலகிற்கு எடுத்துக் காட்டும் சம்பவமாக காசாவில் தலைவர்கள் பெஞ்சமின் நிதான்யாகு வின் அரசு 42 நாட்களுக்கு பிறகு போரை தொடர்ந்து நடத்த வேண்டும் என நிர்பந்தம் செய்து வரும் நிலையில் மீண்டும் ஒரு போர் தொடங்கும் சாத்தியக்கூறு குறித்து பல்வேறு கருத்துக்கள் வெளியாகியுள்ளன.

இறுதியாக இஸ்ரேல் நாட்டின் ராணுவம் மற்றும் அதன் ஆயுதங்களை வெல்லும் சக்தி இந்த உலகத்தில் யாருக்கும் இல்லை என்ற ஒரு மாய பிம்பத்தை வெறும் 50,000 பேர் கொண்ட ஒரு நகர போராளி குழுவான ஹமாஸ் முற்றிலுமாக தகர்த்து எரிந்து விட்டதாக அறிந்து கொள்ள முடிகிறது. அதேநேரத்தில் இனி வரும் காலங்களில் இஸ்லாமிய கூட்டு படைகள் மற்றும் போராளிகள் வலுப்பெற்று தாக்குதலை தொடர கூடிய நிலை இஸ்ரேலிய நாட்டின் பாதுகாப்பிற்கு மிகுந்த அச்சுறுத்தல்களை வரும் காலங்களில் ஏற்படுத்தும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

ஏனெனில், ஹமாஸ் மற்றும் பாலஸ்தீன மக்கள் இழந்தது மிகப் பெரிய அளவில் ஆன ஒன்றாகும்.இனி அவர்கள் இந்த உலகில் இழப்பதற்கு வேறு ஒன்றும் இல்லை என்பதே நாம் தெளிவாக புரிந்து கொள்ளும் நிலையில் இதற்கான தீர்வை அறிந்து கொள்ளலாம்.

உலக வரலாற்றில் அரபுகள் யூதர்கள் மூலம் மிகுந்த உயிர் இழப்புகளை சந்தித்து வந்த நிலையில் இது போன்ற கொடூர நிலை எப்போது முடியும் என்ற கேள்வியை உலகில் வாழும் மனித சமூகத்தின் ஆர்வலர்கள் எதிர்பார்த்து காத்துக் கொண்டு இருக்கும் நிலையில் இதற்கான தீர்வை உலகம் முழுவதும் தற்போது எதிர்பார்த்து காத்துக் கொண்டு இருக்கும் இந்த வேளை பரபரப்பான ஒன்று என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

ஆம்.... எந்த அளவுக்கு சதி தீட்டம் தீட்டி பாலஸ்தீன மக்களின் விடுதலையை நசுக்கி விட யூத சியோனிச வலதுசாரி சித்தாந்தம் முயன்று வரும் நிலையில் அது ஒரு எந்த நிலையிலும் சாத்தியம் இல்லை என்பதே யதார்த்தமான நிலையாகும்....!!

# தேர்தல் வாக்குறுதிகளை செயலில் காட்டும் அதிரடி!



எம்.எஸ். அமீர் ஹுசைன்



ஓய்வு பெற்ற நிலையில் 06 ஜனாதிபதிகள் தற்போது அரச சலுகைகளை அனுபவித்து வருகின்ற நிலையில் அவர்களுக்கான வரப்பிரசாதங்கள், சலுகைகள், கொடுப்பனவுகளை மட்டுப்படுத்த அரசு திட்டம் வகுத்து வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஏற்கனவே ஜனாதிபதித் தேர்தல் பிரசார மேடைகளிலும் அதன் பின்னர் பொதுத் தேர்தல் காலங்களிலும் இவ்விடயம் குறித்து தேசிய மக்கள் சக்தி கடுமையான விமர்சனங்களை செய்து வந்ததோடு அநாவசியமான அரச செலவினங்களை கட்டுப்படுத்துவதாகவும் வாக்குறுகளை வழங்கி இருக்கின்ற நிலையில் வேறு வழி இல்லாமல் இவ்வாறான நடவடிக்கைக்கு இறங்க இருக்கின்றது.

இவ்விடயம் தொடர்பாக அண்மையில் ஹொரணையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் ஆதரவாளர்கள் மத்தியில் பேசிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கா தெரிவித்துள்ளார். குறிப்பாக மஹிந்த ராஜபக்ஷ குடும்பம் தற்போதைய நிலையில் ஓய்வு பெற்ற ஜனாதிபதி என்ற நிலையில் அபரிமிதமான அரசா வளங்களை பெற்று சுகபோகம் அனுபவித்து வருவதாகவும் எதற்காக அரசாங்கம் அப்படியான வசதி வாய்ப்புக்கள் உள்ளவர்களை அரச செலவில் பராமரிப்பு செய்ய வேண்டும் என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது.

ஆவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற வீடுகளை மீண்டும் ஒப்படைக்குமாறு அழைப்பு விடுக்கப் பட்டிருக்கின்றது என்றும் ஜனாதிபதி கூறி இருக்கின்றார். ஏற்கனவே பாதுகாப்பு குறைக்கப்பட்டது. எல்லை மீறிய நிலையில் இருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை அரசாங்கம் குறைத்து கட்டுப்பாட்டை கொண்டு வந்தது. அதற்கு எதிராக பலரும் குரல் எழுப்பியும் அரசு தலை குணியவில்லை. இந்நிலையில் அரச வாசஸ்தலமாக பாவித்து வரும் ஜனாதிபதிமாருக்கான விடுகளையும் மீளப் பெறும் போது அதற்கான தேவையற்ற செலவினங்களையும் குறைப்பதோடு பதவியில் இருந்து ஓய்வு பெற்றால் அவரவர் வேலைகளை அவர்களே பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற புதிய அரசியல் கலாசாரத்தை கட்டியெழுப்புவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறான ஒரு நிலையில் ஓய்வுபெற்ற ஸனாதிபதியாக இருந்து வரும் மஹிந்த ராஜபக்ஷ வின் வீட்டிற்கான மதிப்பீட்டை செய்த போது அதற்கான வாடகை 46 இலட்சம் ரூபா செலுத்த வேண்டும் என்றும் அதனை செலுத்த முடியாவிட்டால் அரசாங்கம் 30,000 ரூபாவை மாதாந்த வாடகையாக செலுத்தும். அதனை பெற்றுக்கொண்டு வேரொரு வீட்டை பார்க்க வேண்டியது தான் என்று அண்மையில் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ள விடயம் நாட்டு மக்களை சிந்திக்க வைத்திருக்கின்றது. இவர்களது வீடகளுக்கான நீர், மின்சார கட்டணங்களையும் அரசாங்கமே செலுத்தி வருகின்றது. அத்துடன் பாதுகாப்பு கடமையில் இருந்த ஊழியர்களுக்காக அரசாங்கம் வருடாந்தம் 70 கோடி ரூபாவை செலவிட வேண்டி இருந்ததோடு அதனையும் நிறுத்தினோம். இனி எதனையும் இலவசமாக கொடுக்க முடியாது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். இந்த வகையில் பாராளுமன்ற உறுப்பினர் களுக்கான ஓய்வூதியத்தையும் நிறுத்த எதிர்காலத்தில் புதிய சட்ட மூலம் கொண்டு வரப்பட இருப்பதாக அறிய முடிகின்றது. அவ்வாறான ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டால் 225 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் 05 வருடங்கள் பாராளுமன்றத்தில் இருந்தால் கிடைக்கும் ஓய்வூதியமும் இல்லாமல் போகும் நிலை இருக்கின்றது.

அதே நேரம் அரசாங்கம் அதன் நிர்வாக செயற்பாடுகளை மக்களுக்கு சிரமம் இல்லாமல் மேற்கொள்ள நடவடிக்கைகள் பல எடுத்திருக்கின்றது என்ற விடயத்தையும் ஜனாதிபதி வெளிப்படுத்தி இருக்கின்றார். அனைத்து செயற்பாடு களையும் இலத்திரனியல் வழிமுறை ஊடாக மக்கள் இலகுவாக மேற்கொள் வதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்படும் திட்டம் இருக்கின்றது. அதற்காக இந்தியா 1000 கோடி ரூபா நிதி உதவிகளையும் தொழில்நுட்ப உதவிகளையும் வழங்க முன்வந்திருக்கின்றது என்ற விடயத்தையும் அரசாங்கம் வெளியிட்டி ருக்கின்றது.

யதார்த்தம் என்னவெனில் கடந்த காலங்களில் அரச இயந்திரத்தின் செயற்பாடுகளில் நீண்ட காலம் தாமதம் இருந்து வருவதை மறந்துவிட முடியாது. அதனால் மக்கள் அரச நிர்வாக சேவைகளின் உச்ச பயனை அடைய கடுமையான சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். அரச அலுவலகங்களில் வேலைகளுக்கு போனால் இலகுவில் வேலை நடப்பதில்லை. ஓய்வூதியம், பிரதேச செயலக மட்டத்தில் இருந்து ஜனாதிபதி செயலகம் வரையிலும் இந்த கால தாமதம் இருந்து வருகின்றது. இவ்வாறான குறைபாடுகளை நிவர்த்தி செய்வதன் மூலமே அரச நிர்வாக இயந்திரத்தை சரியான முறையில் இயங்கச் செய்து மக்களுக்கு குறுகிய காலத்தில் விரைவான சேவையை வழங்க முடியுமானதாக இருக்கும்.

அது மட்டுமல்லாமல் தேசிய பொலீஸ் ஆமுணைக்குழ தொடர்பாகவும் அரச மட்டத்தில் அதிருப்தி தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. ஏற்கனவே கொதாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியில் மிகவும் திறமையாக செயல்படக்கூடிய 650 அதிகாரிகளை இடமாற்றம் செய்திருப்பதாகவும் இவர்களை மீண்டும் உாயி இடங்களில் நியமிக்க அரசாங்கம் மயற்சி எடுக்கின்ற போது தேசிய பொலீஸ் ஆணைக்குழ அதனை இழுத்தடிப்பு செய்து வருவதாகவும் ஜனாதிபதி கவலை வெளியிட்டிருக்கின்றார். கடந்த காலங்களில் இடம்பெற்ற குற்றப் புலனாய்வு விவகாரங்களை சரியான முறையில் தெரிந்து வைத்திருந்த அதிகாரிகளே இவ்வாறு கோதாபய காலத்தில் இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதாக கூறுகின்றார்.

எவ்வாறோ கிளீன் ஸ்ரீ லங்கா (தூய்மை இலங்கை) திட்டம் மூலம் எதிர்காலத்தில் நாட்டில் பல துறைகளிலும் மாற்றங்கள் வரும் எனட்பது தெரிகின்றது. ஒரு நாடு அபிவிருத்தி என்ற இலக்கை அடைய வேண்டுமானால் இவ்வாறு பல துறைகளில் புரட்சிகரமான மாற்றங்கள் மறுசீரமைப்புக்கள் இடம்பெற வேண்டும். அவை சரியான இலக்கை நோக்கியவைகளாக அமைய வேண்டும். வெறும் காலத்திற்குரிய அரசியல் நோக்கம் கொண்டவையாக அல்லது தமது ஆட்சியில் நடைபெறும் குறைபாடுகளை மறைத்து மக்கள் மனதை திசை திருப்புவதற்கான குறுகிய கால செயற்பாடாக இல்லாமல் தூர நோக்கம் கொண்ட மக்ள்ள நலன் சார்ந்தவையாக அமையும் போது மக்கள் ஆதரவு தொடரும் என்பதில் சந்தேகம் இல்லை.



# ஒலுவில்-பாலமுனை சமுர்த்தி வங்கியின் பொதுச்சபைக் கூட்டமும் கட்டுப்பாட்டுச் சபை உறுப்பினர்கள் தெரிவும்





**(இஸட்.ஏ. றஹ்மான்)**

ஒலுவில் பாலமுனை சமுர்த்தி வங்கியின் 2025 ஆம் ஆண்டுக்கான பொதுச்சபைக் கூட்டமும் கட்டுப்பாட்டுச் சபையின் உறுப்பினர்கள் தெரிவும் (19) ஒலுவில் ஜாயிசா மகளிர் கல்லூரியில் ஒலுவில் பாலமுனை சமுர்த்தி வங்கியின் முகாமையாளர் T.K.றஹ்மத்துல்லாஹ் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் ஆயுஊ. அகமட் நசீல் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தத்துடன் சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் AM. ஹமீட், வங்கிச்சங்க முகாமையாளர் ரீ பரமானந்தம் மற்றும் வங்கி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனார்.

நிகழ்வின் இறுதியில் இவ்வாண்டுக்கான புதிய கட்டுப்பாட்டுச் சபை தவிசாளராக ஏ.எம்.பழீல் தெரிவுசெய்யப்பட்டதுடன் ஏனைய உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பஸ்-முச்சக்கர வண்டி மோதல்: பதியுத்தீன் கல்லூரி மாணவி பலி



**( ரஷீத் எம். றியாழ்)**

பஸ் மற்றும் முச்சக்கர வண்டி ஆகியன மோதிக்கொண்டு விபத்துக்குள்ளான சம்பவத்தில் உடுதெனிய ஊரைப் பிறப்பிடமாகக் கொண்ட கண்டி பதியுத்தீன் மஹ்மூத் மகளிர் கல்லூரியின் உயர்தரப் பிரிவு மாணவியொருவர் ஸ்தலத்திலே பலியான கோர சம்பவமொன்று அண்மையில் (19) கண்டி மைலபிட்டிய எனும் இடத்தில் இடம்பெற்றது.

ஆசிக் பாத்திமா அம்னா வயது (19) என்ற மாணவியே இப்பரிதாப மரணத்தை தழுவியவராவார்.

தனது தாய், தந்தை சகோதரர் சகிதம் தனது வசிப்பிடமான உகுரஸ்ஸபிட்டிய ஊரிலிருந்து தாய் ஊரான உடுதெனிய ஊருக்கு முச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த சமயம் தனியார் பஸ் முச்சக்கர வண்டியுடன் மோதியதாலேயே இம்மாணவி ஸ்தலத்தில் மரணமடைந்துள்ளார்.

முச்சக்கர வண்டியை ஓட்டி வந்த மாணவியின் சகோதரரும் தாயும் தந்தையும் பலத்த காயங்களுடன் ரிகில்லகஸ்கட ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

மாணவியின் ஜனாஸா நல்லடக்கம் உடுதெனிய ஜாமிஉல் அஸ்ஹர் ஜும்ஆ மஸ்ஜித் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

# கற்பிட்டி இந்து இளைஞர் சேவை மன்றத்தின் தைப் பொங்கல் விழா




**(எம்.எச்.எம்.சியாஜ், எம்.யூ.எம்.சனூன்)**

கற்பிட்டி இந்து இளைஞர் சேவை மன்றத்தின் ஏற்பாட்டில் கற்பிட்டி ஸ்ரீ வேல் முருகன் ஆலய நிர்வாகத்தின் அனுசரணையில் ஞாயிற்றுக்கிழமை (19) ஆலயத்தில் இடம்பெற்றது.

தைப்பொங்கல் விழா கற்பிட்டி இந்து இளைஞர் சேவை மன்றத்தினால் அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே கலை கலாசார விழுமியங்களை ஊக்குவிக்கும் வகையில் அறநெறிப் பாடசாலை ஆசிரியைகளின் நெறிப்படுத்தலுடன் பெற்றார்களின் பங்களிப்புகளுடனும் இடம்பெற்ற தைப்பொங்கல் விழா சிறப்பு பூஜையினை கற்பிட்டி ஸ்ரீ வேல் முருகன் ஆலய பிரதம குருக்கள் சிவ ஸ்ரீ வரதேஸ்வரக் குருக்கள் நடாத்தியதுடன் ஆசியுரையினையும் நிகழ்த்தியமையும் குறிப்பிடத்தக்கது.

# பாலாவி நாகவில்லு எருக்கலம்பிட்டியில் இலவச மருத்துவ முகாம் இடம்பெற்றது




**(எம்.எச்.எம்.சியாஜ், எம்.யூ.எம்.சனூன்)**

பாலாவி நாகவில்லு எருக்கலம் பிட்டி ஜம்மிய்யதுல் உலமா கிளை மற்றும் எருக்கலம்பிட்டி பிரைம் அபிவிருத்தி நிறுவனம் ஆகியவற்றின் வேண்டுகோளுக் கிணங்க அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா புத்தளம் கிளையின் பூரண அனுசரணை யுடனும் புத்தளம் ஆயுர்வேத வைத்தியசாலையின் ஒத்துழைப்புடனும் கடந்த சனிக்கிழமை (18) பாலாவி நாகவில்லு எருக்கலம்பிட்டி முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் இலவச ஆயுர்வேத வைத்திய முகாம் இடம்பெற்றது.

இவ் வைத்திய முகாமில் ஆயுர்வேத வைத்திய குழாம் மூலம் பொதுமக்களுக்கு இலவச வைத்திய ஆலோசனைகளும், மருந்துகளும் வழங்கி வைக்கப்பட்டதுடன் தொற்று நோய்கள் தொடர்பாக நோயாளிகளுக்கு விசேட ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

நீண்ட காலமாக நோயால் பாதிக்கப்பட்ட நோயாளர் களுக்கு விஷேட மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டதுடன், முன்னூறுக்கும் மேற்பட்ட மக்கள் குறித்த வைத்திய முகாமில் இலவச மருத்துவ உதவிகளை பெற்றுக் கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

# மொன்னங்குளம் அல் ஹஸனாத்தில் புதிய மாணவர் சேர்ப்பு

**(எம்.ரீ.ஆரிப்)**

கல்கமுவ மொன்னங்குளம் அல் ஹஸனாத் பாலர் பாடசாலையின் 2025 ஆண்டுக்கான புதிய மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நிகழ்வு ஆசிரியை எஸ்.எச்.என்.மினா தலைமையில் நடைபெற்றது.



இதன்போது அல் ஹஸனாத் ஜும்ஆ மஸ்ஜித் பேஷ் இமாம் ஏ. டபிள்யூ.எம்.பலீல் மற்றும் கல்கமுவ முன்மாதிரி பாடசாலையின் அதிபர் எம்.எம்.நளீம் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

**நாச்சியாதீவு பர்வீன்**

முஸ்லிம் பெயர்தாங்கிய தீவிரவாத சிந்தனையுடைய சஹ்ரானும் அவனது கைக்கூலிகளும் மேற்கொண்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகமும் தலைகுனிந்து அவமானப்பட்டதோடு அப்பாவி முஸ்லிம் சமூகம் குற்றவாளிக்கூண்டில் ஏற்றப்பட்டு கேள்விக்குட்படுத்தப்பட்டது. அப்பாவி முஸ்லிம்கள் சந்தேகக் கண் கொண்டே பார்க்கப்பட்டார்கள். முஸ்லிம் சமூகத்திற்கும் ஏனைய சமூகங்களுக்கும் இடையில் பெரும் இடைவெளியும் விரிசலும் இதன்மூலம் உருவாகியது

முஸ்லிம் சமூகம் இரண்டாம் தரப்பிரஜைகளாக திட்டமிட்ட இனவாத சக்திகளினால் ஆக்கப்பட்டது. நின்றால், நடந்தால், பார்த்தால் எல்லாமே சந்தேகக் கண்கொண்டே நோக்கப்பட்டது. வேலைத்தளங்களிலும், வெளியிடங்களிலும் பெரும்பான்மை சகோதரர்களின் பார்வையை எதிர்நோக்க திராணியற்று, தயங்கிய வேதனை நிறைந்த நாட்களவை காலப்போக்கில் இந்த எண்ணம் தளர்வுற்றாலும் முற்றாக இல்லாமல் போகவில்லை.

இந்த பெரும்பான்மை எண்ணக்கருவை கேள்விக்குட்படுத்தும் ஒரு ஆவணமாக ராஜன் /ஹல் ஆங்கிலத்தில் எழுதிய நுளவநச ஞரனெயல யவவயஉம (ாநநெ வுாந ஆலளவநசல உயனெ சுயளைநன) என்ற நூல் அமைந்துள்ளது. இந்த ஆங்கில நூலை தமிழுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா ஃபோரத்தின் தலைவரும் மூத்த ஊடகவியலாளருமான என்.எம். அமீன். "உயிர்த்த ஞாயிறு அனர்த்தம்" (மறைகரம்

என்பவற்றை மிகத் தெளிவாகவும் ஆழமாகவும் ராஜன் /ஹல் இங்கே தனது ஆய்வின் மூலம் வெளிப்படுத்தி இருக்கிறார். ராஜன் ஹூலின் இந் நூலானது அந்தக் காலகட்டத்தில் ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தின் மீதும் இணைந்தே உருவாக்கப்பட்ட அவப்பெயரை கேள்விக்குறப்படுத்தியது எனலாம்.

ராஜன் ஹூலின் ஆங்கில வழி மூலமான இந்த நூலினை சிரேஷ்ட ஊடகவியலாளரும், எழுத்தாளரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவருமான என்.எம். அமீன் தமிழுக்கு மொழிபெயர்த்துள்ளார். மிக நீண்ட காலமாக ஊடகத்துறையில் இருக்கின்ற என்.எம். அமீன் ஊடகத்துறையில் தான் பெற்ற அனுபவத்தையும் தனது தமிழ் மொழி ஆற்றலையும் இந்த மொழிபெயர்ப்பை செய்வதற்கு செவ்வனே அவர் பயன்படுத்தியிருக்கிறார். சாதாரண

வதந்திகளுக்கு இவ்விரு நூல்களும் ஏதோ ஒரு வகையில் பதிலாக அமையலாம்.

இவ்விரு நூல்களினதும் வெளியீட்டு விழாவை "இறுதிக்கட்ட யுத்தம் முடிவுற்று பத்து வருடங்கள் கழிந்த போதும் முரண்பாடுகளற்ற சுதந்திர இலங்கை ஒன்றை உருவாக்குவதற்காக எமது நிறுவனங்களை மீண்டும் கட்டி எழுப்புவதற்கு பதிலாக பழமை மிகு இனவாத மதவாத கருத்துக்கள் இன்றும் அவ்வாறு இருந்து வருகிறது நாம் சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுவதற்கு தவறியுள்ளோம்"

சட்டத்தின் ஆட்சிக்கு அப்பால் கொள்கையும் பேராசையும் செயற்பட்ட போது என்று ஆரம்பிக்கும் முதலாவது பத்தியிலே ராஜன் /ஹல் மிகத் தெளிவாக நடுநிலையான பார்வையோடு இந்த விடயத்தை ஆராய்ந்து இருப்பதை அவரது இந்த வெளிப்படையான கருத்தின் மூலம் அவதானிக்க முடிகிறது. காலத்துக்கு

சஹ்ரான் பற்றிய மேலதிக விபரம் போன்றவற்றை மிகத் தெளிவாக அறிந்து கொள்ளக் கூடிய வகையில் இலகு மொழிநடையில் இந்த நூல் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. துல்லியமான இந்த மொழிபெயர்ப்பைச் செய்த சிரேஷ்ட பத்திரிகையாளர் என்.எம். அமீன் அவர்கள் பாராட்டுக்குரியவரே!

இவ்வாறே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் எழுதிய "நாங்கள் வேறானவர்கள் அல்ல மண்ணின் வேறானவர்கள்"

என்ற மிகக்காத்திரமான நூல்பேற்றியும் இங்கே பேச வேண்டி இருக்கிறது. முஸ்லிம் சமூகத்தின் மீதான அழுத்தங்களும் நீதமற்ற செயற்பாடுகளும் வேண்டுமென்றே கட்டமைக்கப்பட்ட அபாண்டங்களும் என்று வெவ்வேறு தலைப்புகள் கூடாக தனது அனுபவத்தை ஆழமாக

தொடர்பான தெளிவுபடுத்தல்:

முஸ்லிம் குடித்தொகை பற்றி சிங்களவர்களுக்குள்ள பயப்பிராந்தி.

- முஸ்லிம்களிடமிருந்து சிங்கள கலாச்சாரத்திற்கு வரக்கூடிய அச்சுறுத்தல்கள் குறித்த எண்ணங்கள்


- பயங்கரவாதம் குறித்த மாயையை களைதல். இனத்துவ சமய தீவிரவாதமா? அல்லது பொருளாதார மேலாதிக்க போட்டியா?

இப்படி பல்வேறு தலைப்புகளில் தனது அனுபவத்தையும் ஆய்வையும் ஒன்று திரட்டி மிக அழகிய முறையில் இந்த புத்தகத்தை தந்திருக்கின்றார் எழுத்தாளர்.

கைதேர்ந்த ஒரு எழுத்தாளனின் கைகளிலே சொற்கள் அற்புதமான சிற்பம் போல் ஆகிவிடுகின்றது. வித்துவச்செருக்கற்ற மொழிநடையில் தனக்கே உரிய மொழி வான்மையை இலாவகமாக பயன்படுத்தி வாசகனை வளைத்துப் போடும் வசீகரத்தை இந்நூல் செய்கிறது. ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகமும் இந்த நாட்டில் எதனை எதிர்பார்க்கின்றது என்பதனை இந்த சமூகத்தின் குரலாக ஹக்கீம் இந் நூலின் மூலம் முன்வைத்துள்ளார்.

நம் முன்னே இருக்கின்ற பிரச்சினைகளைப் பற்றி பேசுவதோடு நாம் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகளைப் பற்றியும் மிக ஆழமாக பேசுகின்றது இந்நூல். பல்லினச் சமூக கட்டமைப்புக்குள் சிறுபான்மையாக வாழுகின்ற ஒரு சமூகக் குழுமத்தின் எண்ணங்களையும் எதிர்பார்ப்புகளையும் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் ஏற்படுகின்ற தடங்கல்களையும் தெளிவுபடுத்துகிறது இந்நூல்.

உயிர்த்த ஞாயிறு தீவிரவாத சம்பவத்தின் பின் உருக்குலைந்து போயிருந்த எமது சமூகக் கட்டமைப்பை மீண்டும் அந்த பழைய நிலைக்கே கொண்டு வருவதற்கு ரவூப்




# "உயிர்த்த ஞாயிறு அனர்த்தம்" (மறைகரம் வெளிப்பட்டபோது) "நாங்கள் வேறானவர்கள் அல்ல மண்ணின் வேரானவர்கள்"...

வெளிப்பட்டபோது) எனும் தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார்.

"இறுதிக்கட்ட யுத்தம் முடிவுற்று பத்து வருடங்கள் கழிந்த போதும் முரண்பாடுகளற்ற சுதந்திர இலங்கை ஒன்றை உருவாக்குவதற்காக எமது நிறுவனங்களை மீண்டும் கட்டி எழுப்புவதற்கு பதிலாக பழமை மிகு இனவாத மதவாத கருத்துக்கள் இன்றும் அவ்வாறு இருந்து வருகிறது நாம் சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுவதற்கு தவறியுள்ளோம் "

சட்டத்தின் ஆட்சிக்கு அப்பால் கொள்கையும் பேராசையும் செயற்பட்ட போது என்று ஆரம்பிக்கும் முதலாவது பத்தியிலே ராஜன் /ஹல் மிகத் தெளிவாக நடுநிலையான பார்வையோடு இந்த விடயத்தை ஆராய்ந்து இருப்பதை அவரது இந்த வெளிப்படையான கருத்தின் மூலம் அவதானிக்க முடிகிறது.

காலத்துக்கு காலம் அவ்வப்போது சிறுபான்மை முஸ்லிம்கள் மீது கட்டமைக்கப்பட்ட இனவாத செயற்பாடுகளை அவர் மிகத் தெளிவாக இந்த புத்தகத்தின் மூலம் தெளிவுபடுத்தி உள்ளார்.

சஹ்ரான் என்னும் தீவிரவாதி தொடர்பில் சாதாரண முஸ்லிம் மக்கள் இலங்கையில் அறிந்திராத பல விடயங்களை இவரது ஆய்வு தெளிவுபடுத்தி நிற்கின்றது சஹ்ரானின் பிறப்பு வளர்ச்சி இயக்க ரீதியான செயல்பாடுகள் தீவிரவாதத்தின் மீதான ஈடுபாடு

ஒரு பாமரனும் இந்த புத்தகத்தை வாசிப்பதன் மூலம் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் இருந்தவர்கள் அதன் முரண்பாட்டின் தோற்றுவாய் சஹ்ரான் பற்றிய மேலதிக விபரம் போன்றவற்றை மிகத் தெளிவாக அறிந்து கொள்ளக் கூடிய வகையில் இலகு மொழிநடையில் இந்த நூல் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. துல்லியமான இந்த மொழிபெயர்ப்பைச் செய்த சிரேஷ்ட பத்திரிகையாளர் என்.எம். அமீன் அவர்கள் பாராட்டுக்குரியவரே!

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னரான முஸ்லிம் சமூகம் எதிர்கொண்ட சவால்களை, அவமானங்களை, எதிர்ப்புகளை அடையாளப்படுத்தி அச்சவால்கள் மூலம் பெற்றுக்கொண்ட அனுபவத்தினையும், முஸ்லிம் சமூகத்தை இந்த அவப்பெயரிலிருந்து பாதுகாப்பதில் அரசியல்வாதியாக மேற்கொண்ட முன்னெடுப்புகளையும் ஆவணப்படுத்தும் முகமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ ின் தேசிய தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் எழுதிய "நாங்கள் வேறானவர்கள் அல்ல மண்ணின் வேரானவர்கள்" என்ற நூலின் வெளியீடும் இதே மேடையில் இதே நேரத்தில் இடம் பெற உள்ளது.

முஸ்லிம் சமூகத்தின் மீது பொய்யாக இட்டுக்கட்டப்பட்ட

காலம் அவ்வப்போதும் சிறுபான்மை முஸ்லிம்கள் மீது கட்டமைக்கப்பட்ட இனவாத செயற்பாடுகளை அவர் மிகத் தெளிவாக இந்த புத்தகத்தின் மூலம் தெளிவுபடுத்தி உள்ளார்.

சஹ்ரான் என்னும் தீவிரவாதி தொடர்பில் சாதாரண முஸ்லிம் மக்கள் இலங்கையில் அறிந்திராத பல விடயங்களை இவரது ஆய்வு தெளிவுபடுத்தி நிற்கின்றது சஹ்ரானின் பிறப்பு வளர்ச்சி இயக்க ரீதியான செயல்பாடுகள் தீவிரவாதத்தின் மீதான ஈடுபாடு என்பவற்றை மிகத் தெளிவாகவும் ஆழமாகவும் ராஜன் ஹூல் இங்கே தனது ஆய்வின் மூலம் வெளிப்படுத்தி இருக்கிறார்.

ராஜன் ஹூலின் ஆங்கில வழி மூலமான இந்த நூலினை சிரேஷ்ட ஊடகவியலாளரும், எழுத்தாளரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவருமான என்.எம். அமீன் தமிழுக்கு மொழிபெயர்த்துள்ளார். மிக நீண்ட காலமாக ஊடகத்துறையில் இருக்கின்ற என்.எம். அமீன் ஊடகத்துறையில் தான் பெற்ற அனுபவத்தையும் தனது தமிழ் மொழி ஆற்றலையும் இந்த மொழிபெயர்ப்பை செய்வதற்கு செவ்வனே அவர் பயன்படுத்தியிருக்கிறார். சாதாரண ஒரு பாமரனும் இந்த புத்தகத்தை வாசிப்பதன் மூலம் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் இருந்தவர்கள் அதன் முரண்பாடின் தோற்றுவாய்

பதிந்திருக்கின்றார் ரவூப் ஹக்கீம்.

கொடூரமான உயிர்த்த ஞாயிறு தாக்குதலானது வரலாற்றில் முஸ்லிம்களாகிய எங்களை இக்கட்டுக்குள் தள்ளி இருப்பதை வருத்தத்துடன் ஏற்றுக்கொள்ள நிர்பந்திக்கப்பட்டுள்ளோம். எங்கு எவ்வாறு எப்போது நிலைமைகள் மோசமடைந்தன என்பதைப் பற்றி விமர்சன ரீதியாக பின்னோக்கிப் பார்ப்பது நல்லது. எங்களது சொந்த வாழ்விலும் நடவடிக்கைகளிலும் ஒத்து வராதவற்றை கண்டறிந்து துண்டு துண்டான அவற்றை ஒன்று சேர்த்து ஒரு சட்டகத்தில் பொருத்திப் பார்ப்பதே சாலச் சிறந்ததாகும். அப்பொழுதுதான் இலங்கையின் பன்மைதுவ சமூகத்தில் ஓர் அழகிய வரைவாக அது இடம்பெற வாய்ப்புள்ளது. பாலைவனப் புழுதி புயலில் தீக்கோழி தனது தலையை புதைத்துக் கொள்வது போல எங்களது பல்லின பல மத சமூக அமைப்பில் வழமையான பாரம்பரிய உண்மைகளை இலகுவில் மறைத்து விட முடியாது. என்கிறார் ஹக்கீம். பழுத்த அனுபவம் வாய்ந்த வாசகனும், எழுத்தாளனும், ஆய்வாளனும், அரசியல்வாதியுமாக தன்னை இந்த நூலின் மூலம் நிரூபித்துள்ளார் நூலாசிரியர் சட்டமுதுமாணி ரவூப் ஹக்கீம்.

- சமாதானத்திற்கான ஆர்வமும், அதிருப்தி அளிக்கும் தலைவிதியும்.

- அறியப்பட்ட அச்சுறுத்தல்கள்

ஹக்கீம் பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் மிகவும் காத்திரமாக முன்னெடுப்புகளை மேற்கொண்டவர் என்பது நடுநிலையான அனைவருக்கும் தெரிந்த உண்மையாகும். அவ்வாறே கொவிட்- 19 வைரஸின் தாக்கத்தின் மூலம் இறந்த முஸ்லிம் உடல்களை எரிக்க வேண்டாம் என்று உலக சுகாதார நிறுவனங்களே தெரிவித்த போதும் அவற்றைக் கருத்தில் கொள்ளாது இலங்கையில் இறக்கின்ற முஸ்லிம் உடல்களை தகனம் செய்வதற்கு அன்றைய இலங்கை அரசு வழங்கிய அந்த கசப்பான அனுபவத்தை எந்த ஒரு முஸ்லிமாலும் மறக்க முடியாது அதன் பின்னணியில் இருந்த இனவாத போக்கினையும் மெல்லச் சுட்டிக் காட்டுகிறது இந்த புத்தகம்.

உயிர்த்த ஞாயிறு அனர்த்தம் (மறைகரம் வெளிப்பட்டபோது), மற்றும் நாங்கள் வேறானவர்கள் அல்ல மண்ணின் வேரானவர்கள் இந்த இரு நூல்களின் வெளியீட்டு நிகழ்வும் இம்மாதம் முப்பதாம் திகதி **(30/01/2025)** வியாழக்கிழமை சரியாக மாலை 5 மணிக்கு இலங்கை மன்றக் கல்லூரி கேட்போர் கூடத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் ஏற்பாட்டில் இடம் பெற உள்ளன.

வேண்டுமென்றே புனையப்பட்ட பொய்களால் புண்படுத்தப்பட்ட முஸ்லிம் சமூகத்திற்கு ஓரளவேணும் ஒத்தடம் கொடுக்கும் ஔடதமாக இவ்விரு நூல்களும் அமையும் என்று நம்புவோம்.






நாச்சியாதீவு பர்வீன்



# அன்புக்குரியவர்களை நோக்கிய அரசியலை செய்கின்றன

## குர்ஷித் மஜீட் கவிதைகள்

கிண்ணியா.ஏ.நஸ்புல்லாஹ்

*காலங்காலமாக* தயாரிக்கப்படுகின்ற கவிதைகள் ஒரு வாசகனிடம் எவ்வாறான மனநிலையை தோற்றுவிக்கின்றன என கலவையான கேள்விகள் இலக்கிய சூழலில் இருக்கவே செய்கின்றன.

அனேகமான பிரதிகள் கவிதைகளுக்கு நிகரான பிரதி போலத் தன்னைக் காட்டிக்கொள்ள முயற்சிப்பதாகவே நான் ஒரு வாசகனாக சூழலில் அறிகின்றேன்.எனினும் வாசிப்பு என்பதே ஒரு நல்ல பிரதியை தயாரிப்பதற்கு பங்களிப்புச் செய்யும் ஒரு சிறந்த நடைமுறையாகும்.

இங்கு நான் பேச விரும்பும் கவிதை சொல்லி குர்ஷித் மஜீட் தயாரிக்கும் கவிதைப் பிரதிகள் யாவும் ஒரு வாசகன் ஊண்டி வாசிக்க வேண்டிய எழுத்தின் அடையாளங்கள்.

சமககால புலத்தில் நேசமித்திரன், பாலைவன லாந்தர், தேன்மொழிதாஸ், ரமேஷ் பிரேதன் என இவ்வகையான கவிதை தயாரிக்கும் கவிதை சொல்லிகளுடன் சமநிலை தயாரிப்பாளராக குர்ஷித் மஜீதை நான் காண்கிறேன்.

குர்ஷித் மஜீட் தனது ஒவ்வொரு பிரதிகளிலும் ஒரு கவிதைச் சம்பவத்தை மிக நுண்ணிய பார்வையில் தருவதும் இன்னும் ஒவ்வொரு கவிதையும் மனித அனுபவத்தின் சாரத்தை சுருக்கமான வடிவங்களில் கைப்பற்றும் புரிதல் அவரது விதிவிலக்கான திறனுக்கு ஒரு சான்றாகும், அங்கு முழு உலகமும் எளிமையான வரிகளில் இருந்து வெடிக்கிறது. வடிவத்தின் இந்த சுருக்கம் மற்றும் சூழலின் அடர்த்தி ஆகியவை குர்ஷித் மஜீட் கவிதைகளில் ஒன்றில் தெளிவாகக் காணலாம்.

தாங்கவொண்ணா ரெப்பெட்டை
வலியெடுத்த
அப் பறவை ஈனக் குரலில் கமறி
சுற்றிப் பறந்து சுவற்றில் முட்டி
என் வாசல் விழுந்தது
சிறியதுதான்
அலகு இரு தொடுப்புற்ற முற்றிய நெல்
மணிகளின்சாயல்
பன்னிறச் சேர்வையை தாண்டிய
நீலத்தில் தெரிந்தது
அருகில் பதுங்கிச் சென்றேன் தாயிடம்
பருகிய அன்பின் மிச்சத்தை என்னிடம்
எதிர்பார்த்திருக்க வேண்டும்
மென் கால் இடற உள்ளங்கையுள்
நிறைந்தது
தடவிக் கொடுத்த போது
பிரிவின் கொடு வெப்பம் விரல்களில்
படிந்தது
அள்ளி எடுத்தேன்.
குச்சி தீட்டி கூடு செய்தேன்
நறுக்கிய பழம் வைத்தேன்.
இரவு தூங்கச் செல்லுமுன்
அதனைப் பார்த்தேன்
கொடுகிச் சுருண்டு இறக்கையுள்
முகம் புதைத்திருந்தது.
சூழலை சூடேற்ற சருகு சேர்த்து
தீ மூட்டினேன்
வெடுக்கென
எழுந்து கொண்ட
பறவை
கண்ணின் கபில
வட்டத்துள்ளிருக்கும்
கருமணியில் பயம்
தெரிய
“ஓ“வென கூப்பாடிட்டது.
தீயை நிறுத்தி தூங்கப்
போனேன்.
படுக்கையெங்கும் பறவையின்
அழுகை
விறைத்து அமர்ந்தேன்.
“தாய்ப் பறவை எங்கு போயிருக்குமா
எந்த வேடன் நெருப்பில் வாட்டி
ருசித்தி
ருப்பானோ“
காற்று பேயாகி ஊழையிட்டது
நான் விழித்துக் கிடந்தேன்.

இந்த கவிதைப் பிரதியின் வாசிப்பு அனுபவம் என் மார்பிலிருந்து உள்ளங்கைவரை ரோமங்கள் சிலிர்க்கும் வஷீயத்தைப் பார்த்தேன்.

ஒரு பறவைக் குஞ்சுவின் வாழ்வியல் தோழ்வியை குர்ஷித் மஜீட் அவரது கண்ணோட்டத்தை வைத்து வடிவமைக்கும் சாதனம் புதுமையானது மற்றும் ஆழமாக வாசகனைப் பாதிக்கிறது . உறவுகளின் நெருக்கமான பிரிதலில் ஏற்படும் முக்கியமான விஷயங்களை கவிதை பேசுகிறது.
குர்ஷிதின் பிரதிகளை ஆராய்வதற்கு அனுமதிக்கிறது. இந்த முன்னோக்கு சிக்கலான மற்றும் முரண்பாட்டின் அடுக்கைச் சேர்க்கிறது, குடும்ப மற்றும் சமூகக் கட்டமைப்பிற்குள் சிறார்களின் போராட்டங்கள் கண்ணுக்குத் தெரியாத தன்மையை வலியுறுத்துகிறது. ஒரு குழந்தையின் அழு குரல் ஒரு கதை சொல்லும் கருவி மட்டுமல்ல, குழந்தைகளின் உணர்ச்சிகளின் ஆழம், அவர்களின் மௌனமான துன்பம் மற்றும் அவர்களின் எதிர்க்கும் ஆசைகளின் ஆழத்தை வாசகன் அனுபவிக்கும் ஒரு தயாரிப்பு முறையாக கவிதை தன் சம்பவங்களை நிகழ்துகிறது.

குர்ஷிதின் கவிதைகளில் அவரின் தமிழ் மொழியின் மீதான தேர்ச்சி வாசகனுக்கு ஒரு பிரதியை வாசிக்கும் போது அங்கு முழுவதும் தெளிவாகத் தெரிகிறது, அவரது கவிதைகள் உடனடி சூழலை எளிதாகவும் பரிச்சயத்துடனும் ஈர்க்கின்றன, அவை அரசியல் அறம் மற்றும் ஆழமானவை. அவர் உருவாக்கும்கவிதை உடல் மற்றும் உணர்ச்சி நிலப்பரப்புகளில் வாசகனை நங்கூரமிடுகின்றன. சங்கக் கவிதையின் திணை முறையை நினைவுக்குக் கொண்டுவரும் இந்தச் சுற்றுப்புறச் சிறப்புச் பயணம், கவிதைகளில் ஆராயப்படும் கருப்பொருள்களுடன் தடையின்றி கலந்து, அவற்றின் உணர்ச்சித் தாக்கத்தை மேம்படுத்துகிறது.

ஈரம் சிலிப்பிற்று மரம்
ஒரு துளி அவனுக்கு
ஒரு துளி அவளுக்கு.
“ஸ்...” கொடுகிய அவள்.
மென்மையின் குணாதிசயம்.
அவன் மூர்க்கம் உடைத்தவன்.
மழை அடங்கிய சாம்பலுள்
இரு வெண் கொக்குகள்.
பேசி..பேசி..பெருக்கெடுத்த
வார்த்தைகளில்
இனி..
உயிர்க் குறிப் பஞ்சம்.
மொழி வழக்கற்றபோது
அவன் இச்சையின் ஒலியை
விரும்பினான்.
அவள் தந்திரம் தெரிந்தவள்.
பறவைகள் பார்த்திருப்பதாய்ச்
சொன்னாள்.
அண்ணாந்தான்.
ஒரு கிளை..
ஒரு கிளை..
தாவித் திரிந்த
வெண் நாரைக்கு கன்னச் சிவப்பு.
விட்டம் உடைத்து தரை பார்த்தான்.
தேங்கிய நீர்க் குழியுள்
அவளின் பதட்டமுற்ற முகம்.
தப்பிக்கும் லட்சணங்களை அதில்
கண்டான்
அவன் சாந்தமாகினான்.
விட்ட இடத்திலிருந்து தூறல்.
தடிப்புற்ற மழை.

ஈரம் உதறிற்று மரம்.
ஒரு துளி அவனுக்கு.
ஒரு துளி அவளுக்கு.

குர்ஷித் மஜீதின் இன்னுமொரு கவிதை அதீத காதல் அகநிலைகளைப் பேசுவதாகவும் உணர்ச்சிப் பெருக்கைப் பாடத கவிஞனும் கவிதைப் புலத்தில் இருக்க முடியுமா என எனக்குள் கற்பிதம் செய்துகொள்ளும் ஒரு போக்கைக் காண்கிறேன்.

சாரமான காதலின் உயிர்த்திருத்தலை வாசகனுக்குள் கொண்டுவரும் சொற்களின் வழிப் பிரயோகம் ஊழஅஅழுெ அனெி சாதாரண மனம் அல்லது பொதுவான மனம் இங்கு பிரதி முழுக்க பயணிப்பதை இந்த கவிதையில் புரிந்து கொள்ள முடிகிறது.

குர்ஷித் அதிகமான கவிதைகளை சர்ரியலிச அல்லது ஊண்டி வாசிக்க வேண்டிய மொழி உபயோகிக்கப்படும் பிரதிகள் மீதான முறைமை சங்க இலக்கியத்திலிருந்து இன்னும் மொழி தேர்ச்சியிலிருந்து தனது சொற்களஞ்சியத்தை தயாரித்தாலும், அவர் தனது சொற்களை ஒன்றாக இணைக்கும் விதம் ஒரு கவிதைப் பிரதியில் அற்புதமாக விளைகிறது.இது ஈழத்தின் கிழக்கு மண்ணுக்கான பொதுவான மக்கள் பேசும் தமிழுடன் ஒரு தெளிவான ஒற்றுமையைக் கொண்டுள்ளது. பழங்கால மற்றும் நவீனத்தின் இந்த கலவையானது காலமற்ற மற்றும் உடனடியான புரிதலை எல்லோருக்குள்ளும் உருவாக்குகிறதா என்பது பொதுவான கேள்விதான்.
எனினும் உண்மைக்கு உண்மையான கவிதை விரும்பிகள் இவ்வாறான கவிதைப் பிரதிகளைக் கொண்டாடத் தவறுவதில்லை.

இரவொன்றும் பகல் பாதியுமூறிய
கடலையாய் பருத்த
அவன் விசனம்
விரைவெடுத்து ஓடியடங்கிய
குதிரையின் மோவாயாய் நுரைத்து
நிலமூறிற்று.
பிளம்பாகி எழுந்தான்.
தரை வெடிக்க நடந்து பார்த்தான்.
பூரண தகனமுற்ற அடுப்பாகச் சீறினான்.
பாம்பையும் குட்டியையும் விழுங்கியவன்
போல் அலைவுற்றான்.
நெடுக்கும் குறுக்கும் கொதி மூச்சால்
வரைந்தான்.
அடங்கவில்லை.
வானத்துக்கும் பூமிக்கும் தள்ளாடும்
பக்ஷியானான்.
அவள் வந்த போது
அறை வெப்பம் மன்மடங்காய்
பெருக்கெடுத்திற்று
வெற்று மதுப்போத்தல்களையும்
உடல் பொசுங்கி தலை மீந்த
சிகரெட்டையும்
அதன் கெட்ட வாடையையும்
கண்டும் நுகர்ந்தும் கொண்டாள்.
நிலமையின் உட்சுழிவுகளின்
இரகசியங்கள் அவளுள் பதியத்
தொடங்கின.
அவள் புறமுதுகு காட்டாமல்
அவளுக்கு தெரிந்த கவிதையொன்றை
மந்திரித்து
அவனுக்கு ஏவினாள்.
அவன் இதயக் குழிவுள் பீறி
ஊற்று பெருக்கெடுத்தது.
கிளைபற்றும் பசுங்கொடிகள் படர்ந்தன.
சுண்டிச் சிவந்த அரம்பையர்
குலுங்கியாடினர்
மேல் அலகில் காதல் இடுக்கி
கிளிகள் பாடின.
வீணை நரம்பில்
தவளைகள் தத்தின.
அவன் பரம சாதுவாகி
முயலின் கழுத்து ரோமமென காற்றில்
மிதந்தான்.

குர்ஷித் மஜீதின் கவிதைப் பிரதிகள் ஆராயும் கருப்பொருள்களின் நீடிப்பு தன்மை மறுபடியும் மறுபடியும் வாசித்து இன்புரும் எதிரொலியாக பார்க்க முடியும் இந்த பிரதியில் அன்புக்குரியவர்களை நோக்கி சித்தரிக்கப்படுகின்ற சம்பவங்கள் அவரது மொழி பாஷையில் , அவை வெறும் ஆசைகள் அல்ல,

ஆனால் அன்றாட கிளர்ச்சியின் செயல்கள், தனித்தன்மை மற்றும் முகமையின் சிறிய ஆனால் சக்திவாய்ந்த அன்பியலின் வலியுறுத்தல்கள்.

காதல், ஆசை மற்றும் கிளர்ச்சியின் இந்த தருணங்கள் வாழ்க்கையின் சாதாரண யதார்த்தங்களுடன் பின்னிப்பிணைந்துள்ளன, இது குறிப்பிட்ட மற்றும் பொதுவான அனுபவத்தினை உருவாக்குகிறது. இந்த புரிதலான மற்றும் ஆழமான தருணங்களைப் படம்பிடிக்கும் குர்ஷிதின் திறன் கவிதைகள் மிகப்பெரிய பலங்களில் ஒன்றாகும், இது இலக்கியத்தில் அரிதாகவே காணக்கூடிய கவிதை சொல்லிகளின் உள் வாழ்க்கையைப் பற்றிய ஒரு பார்வையை வழங்குகிறது.

கவிதை,கதை,நாவல் மற்றும் பல்சுவை இலக்கியப் பிரதி ஒன்றின் பிரதிநிதியாக வாசகனே இருக்கிறான்.

இங்கு வாசகனுக்கான பிரதிகளை நிகழ்த்திக் காட்டுவது பிரதி ஒன்றைத் தயாரிபவனின் வேலை அதனை குர்ஷ ிதின் பெரும்பாலன கவிதைகள் நிகழ்திக் காட்டுவதை குர்ஷிதின் நல்ல வாசகன் புரிந்துகொள்ளாமலில்லை.

ஈழத்தில் கொண்டாடப்பட வேண்டிய இலக்கிய முகங்களுக்குள் குர்ஷித் முக்கியமானவர்.ஏனென்றால் ஓர் இலக்கியப் பிரதி ஏதேனும் ஒன்றை நிகழ்திக் காட்ட வேண்டும் அவரது அதிகபட்ச கவிதைப் பிரதிகள் நமதுத வாசிப்பு அனுபவத்தினூ டாக மேற்குறிப்பிட்ட அரசியலை அனேகமாக செய்கின்றன.

## முதல் முதலாய் முடி நரைக்கும் போது!

*முதல் முதலாய்*
*முடி நரைக்கும் போது!*

*“வயசாகிட்டு பாருங்களேன்”*
*என்கிறாள் மனைவி.*

*“டேய்... கிழவனாகிட்டாய்”*
*நண்பர்கள் சொல்கிறார்கள்.*

*“இனி இப்படித்தான்” - என*
*கருப்பையும்*
*வெள்ளையையும்*
*பிரித்து பிரித்து*
*புடுங்குகிறார்*
*சலூன் கடைக்காரர்.*

*“வெள்ள முடி வந்துட்டு சேர்*
*வயசு போகுது”*
*மாணவர்கள் ரகசியமாய் சிரித்து*
*சொல்லிக் கொள்கிறார்கள்.*

*மடியில்*
*தலைவைத்து*
*படுத்திருந்த ஒரு நாளில்*

*“இது இள நரைடா மகனே!*
*அறிவாளிகளுக்கு மட்டும் வரும்”*

*என உம்மா சொன்ன பிறகுதான்.*

*முடி நரைக்கும் போது*
*என்னால் புன்னகைக்க முடிகிறது.*

- சாஜித் -

# ஓட்டமாவடி பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் புதிய காரியாலய திறப்பு விழா






*ஓட்டமாவடி பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் புதிய காரியாலய திறப்பு விழா சங்கத்தின் தலைவர் அஷ்ஷெய்க் எம்.எம்.எஸ். ஹாறூன் ஸஹ்வியின் தலைமையில் சனிக்கிழமை (18) நடைபெற்றது.*

*இந்நிகழ்வின் பிரதம அதிதியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமாகிய கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் அவர்களும் கௌரவ அதிதியாக கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள ஆணையாளர் பி. தனேஸ்வரன் அவர்களும் கலந்து கொண்டனர்.*

*மேலும் திணைக்களத்தின் அதிகாரிகள் கூட்டுறவு சங்கத்தின் பனிப்பாளர் சபை உறுப்பினர்கள், ஊர் பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்டு வைபவ ரீதியாக இக்காரியாலயம் திறந்து வைக்கப்பட்டது.*

*அதனைத் தொடர்ந்து மட்/ ஓட்டமாவடி தேசிய பாடசாலையின் கேட்போர் கூடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சங்கத்தின் முன்பள்ளி பாலர் பாடசாலை மாணவர் விடுகை விழா நிகழ்விலும் அதிதிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.*

## சவூதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*பேரீச்சம்பழங்களை இம்முறை நன்கொடையாக வழங்கியுள்ளது.*

*பேரீச்சம்பழங்கள் நாட்டுக்கு கிடைத்துள்ளதாகவும் அவற்றை பள்ளிவாசல்களுக்கு விநியோகிக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படுமென தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர் முனீர் முளப்பர் கூறினார்.*

## மனநலமும் ஆலோசனையும் 66

# வாழ்வா? சாவா?

நாம் அனைவரும் ஒரு அர்த்தமுள்ள வாழ்க்கையை வாழவே இந்த உலகிற்கு வந்திருக்கின்றோம். வாழ்க்கையை பயனின்றி வாழவும் சங்கடங்களை சந்திக்க வேண்டி ஏற்படும் போது அவற்றை சந்திக்க முயற்சிக்காமல் வாழ்க்கையை அழித்துக்கொள்ள எமக்கு எந்த வகையிலும் அதிகாரம் தரப்படவில்லை.

ஆனால் சிலர் பல்வேறு காரணங்களால் வாழ்க்கையை மாய்த்துக் கொள்வதை அல்லது தற்கொலை செய்து கொள்வதை நாம் அடிக்கடி பார்க்கிறோம் அல்லது கேள்விப்படுகிறோம். வாழ்வா? சாவா? என்ற மனநிலையில் மன அழுத்தங்களோடும் வேதனைகளோடும் வாழ்கின்றவர்கள் பற்றி நாம் கேள்விப்பட்டும் இருக்கிறோம்.

ஒவ்வொரு ஆண்டும் உலகில் சுமார் 703 000 பேர் தங்கள் உயிரை மாய்த்துக்கொள்கிறார்கள், மேலும் பலர் தற்கொலைக்கு முயற்சி செய்கிறார்கள் என உலக சுகாதார அமைப்பு தகவல் தருகிறது.

ஒவ்வொரு தற்கொலையும் குடும்பங்களை, சமூகத்தை, முழு நாட்டையும் பாதிக்கும் ஒரு சோகம் நிறைந்த செயலாகும். அத்தோடு தனது உறவுகள் மீது நீண்டகால விளைவுகளை ஏற்படுத்தவும் செய்கின்றது.

2019 இல் உலகளவில் 15-29 வயதுடையவர்களிடையே இறப்புக்கான நான்காவது முக்கிய காரணமாக தற்கொலை இருந்து இருக்கிறது. இது ஒரு ஆரோக்கியமான விடயம் அல்ல. இளம் பிராயத்தில் உள்ளவர்கள் இப்படி பிழையான அவ்வாறே அவசரமான முடிவுகள் எடுப்பதற்கான காரணங்களை கண்டு பிடித்து அவற்றுக்கான தீர்வுகளை பெற்றுக் கொள்ள துணைபுரிவது ஒரு அவசர தேவையாக இருக்கிறது.

வளர்ந்த நாடுகள், வளர்ந்துவரும் நாடுகள், வறுமை கோட்டுக்கு உட்பட்ட நாடுகள் என தற்கொலைகள் உலகின் அனைத்து நாடுகளிலும் நிகழ்கின்றன.

2019 இல் 77% க்கும் அதிகமான உலகளாவிய தற்கொலைகள் குறைந்த மற்றும் நடுத்தர வருமான நாடுகளில் நிகழ்ந்தன என உலக சுகாதார நிறுவன தகவல்கள் குறிப்பிடுகின்றன. இதற்கு பல காரணங்கள் இருக்கலாம். நாட்டுக்கு நாடு காரணங்கள் வேறுபடலாம்.

காரணங்கள் என்னவாக இருந்தாலும் தற்கொலை ஒரு தீவிர பொது சுகாதார பிரச்சனை மட்டும் இன்றி ஒரு பாரிய சமூக பிரச்சனையுமாகும்.

வாழ்க்கையில் சவால்கள், சங்கடங்கள், இழப்புகள் தவிர்க்க முடியாதவை. இவற்றை கண்டு ஓடி ஒளியவோ, முகம் கொடுக்க பயந்து வாழ்க்கையை மாய்த்துக் கொள்ளவோ தேவையில்லை. இருந்தாலும் இவற்றுக்கு முகம் கொடுப்பதற்குத் தேவையான மன தைரியத்தை, சவால்களை சந்திக்கும் நுட்பங்களை, பிரச்சனைகள் தீர்க்கும் திறன்களை எமது பிள்ளைகளுக்கும் இளைஞர்களுக்கும் கட்டாயம் கற்றுக் கொடுக்க வேண்டியது தற்கால சமூகத்தின் அவசர தேவைகளில் ஒன்றாகும்.

தற்கொலைத் தடுப்பு முயற்சிகளுக்கு சுகாதாரத் துறை, கல்வித்துறை, நீதித்துறை, ஆன்மீகத் துறை, அரசியல், ஊடகம் போன்ற துறைகள் உட்பட சமூகத்தின் பல துறைகளின் ஒருங்கிணைந்த ஒத்துழைப்பு தேவைப்படுகிறது.


தற்கொலை செய்து கொள்வதில் பிள்ளைகள் எந்த மனநிலையில் இருக்கிறார்கள் அதற்கான காரணங்கள் என்னவாக இருக்கும் என்பது பற்றிய தகவல்களை அடுத்த இதில் பார்க்கலாம்.

***



அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)
மனோதத்துவ ஆலோசனை நிபுணர்
மனோதத்துவ எழுத்தாளர்

---




பயாஸா பாஸில்

# பத்து இடங்களில் பெண்ணினத்தை கருணை கண்ணோடு பார்க்கும் இனிய மார்க்கம் இஸ்லாம்

**- கருணை வடிவம் 1**

யாருக்கும் சீவனோபாயம் கொடுக்க வேண்டிய கட்டாயம் அவளுக்கில்லை. பெற்றோர்கள், பிள்ளைகள், கணவன் என யாருக்கும் அவள் வழங்கத் தேவையில்லை. மட்டுமல்லாது அவளுக்கு அவளே சீவனோபாயம் தேடிக்கொள்ள வேண்டிய கட்டாயம் அவளுக்கில்லை. பெற்றோர்களுடன் இருக்கும் வரை தந்தை கொடுக்க வேண்டும், திருமணம் முடித்தால் கணவன் கொடுக்க வேண்டும்.

**- கருணை வடிவம் 2**

அவள் கேட்கும் மணக்கொடையை மணவாளன் வழங்க வேண்டும். அவளுடன் சேர்வதோடு மொத்தமாக வழங்கவேண்டும், திருமண ஒப்பந்தம் மாத்திரம் முடிந்தால் பாதி வழங்க வேண்டும்.

**- கருணை வடிவம் 3**

தாயைப் பார், பின்னரும் தாயைப் பார், பின்னரும் தாயைப் பார்! பின்னர்தான் தந்தையை பார். தாய்மையை இங்கே மேன்மைப்படுத்தியுள்ளது, தாய்மையின் கௌரவத்தை எடுத்துக்காட்டியுள்ளது.

**- கருணை வடிவம் 4**

அவளுக்கான (ஹஜ்) புனிதப்பயணத்தை ரத்துசெய்துள்ளது, அவளை பாதுகாக்க, அவளுக்கு பணிவிடை செய்ய ஒரு (மஹ்ரம்) குடும்பத்தவர் இல்லாமல் போகும் போது .

**- கருணை வடிவம் 5**

பெற்றோர்களின் சொத்தில் அவளுக்கு வாரிசுரிமை உள்ளது, சகோதரர்களின் சொத்தில் அவளுக்கு வாரிசுரிமை உள்ளது, கணவன் சொத்தில் அவளுக்கு வாரிசுரிமை உள்ளது, பிள்ளைகளின் சொத்தில் அவளுக்கு வாரிசுரிமை உள்ளது. இருந்தும் கூட யாருக்கும் ஒரு சொட்டும் சீவனோபாயம் கொடுக்க வேண்டிய கட்டாயம் அவளுக்கில்லை.

**- கருணை வடிவம் 6**

பாதுகாவலர், சாட்சியாளர்கள் இல்லாது அவளது திருமணம் செல்லுபடியாகாது. காரணம், அவள் மானத்தில், பிள்ளைகளின் வம்சத்தில் சர்ச்சைகள் வரக்கூடாது என்பதற்காக.

**- கருணை வடிவம் 7**

அவள் கற்பின் மீது அவதூறு பரப்பியவனுக்கு எண்பது கசையடி அடிக்கப்படும், ஊர்ச்சபையில் அவன் அம்பலப்படுத்தப்படும்., அவன் சாட்சி என்றும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**- கருணை வடிவம் 8**

அவள் உயிரையும் மானத்தையும் பாதுகாக்க உயிர்த்தியாகம் செய்தவனுக்கு (ஷஹீத்) வீரமரணம் பட்டம் கொடுக்கப்பட்டு கௌரவிக்கப்படுவான்.

**- கருணை வடிவம் 9**

மரணத்துக்குப் பின்னரும் அவள் மரியாதை செய்யப்படுவாள். அவள் கணவன் அல்லது அவள் போன்ற பெண்களே அவளை குளிப்பாட்ட வேண்டும்.

**- கருணை வடிவம் 10**

ஆணை விட கூடுதல் கஃப்பன் துணியால் அவள் கஃப்பனிடப்பட வேண்டும். ஐந்து பட்டில் அவள் கஃப்பனிடப்பட வேண்டும். காரணம், மரணத்தின் பின்னரும் அவளின் மரியாதை காக்கப்பட வேண்டும் என்பதற்காக.

– தமிழாக்கம் / Imran Farook

---



# வாழ்வில் நேசம் கொண்ட பந்தங்கள்...

நட்புக்கள் ..
உறவுகள் எல்லோரும் பிரிந்து விட்டார்கள்..
என்பதற்காக வாழ்வை நாம் மாயித்துக்கொண்டு கண்ணீரில் மூழ்கிப் போவது தவறுதானே..

தவறு என்று புரியவே வலிகள் குறைய வேண்டும்..
கண்ணீர் கண்களில் இருந்து வடிவது நின்றுவிட வேண்டும்..
மௌனமாக யாரோடும் பேசாமல் இருந்துவிட வேண்டும்...
தனியறையில் நமக்கு நாமே பேசிக்கொள்ள வேண்டும்..

இவை எல்லாம் எதற்கு நம்மதை பக்குவப்படுத்தி உதயமாகும் ஒவ்வொரு நாளையும் சிறப்பாக கடத்தி விடவே..

காயங்களும் வலிகளும் உள்ளத்தில் உடனே நீங்கிவிடுமா? என்ன..
அதை கடந்து செல்லவும் வலிகளில் இருந்து நாட்கள் தூரமாக வேண்டுமல்லவா?

இருந்தும் என்ன செய்யாமல் தடுமாறும் போது நமக்கு நாமே ஆறுதல் படுத்திக்கொள்வதுதானே மனதுக்கு மருந்து..

எந்த பந்தமும் எந்த உறவும் நம்வாழ்வில் நிரந்தரமில்லை என்பதை கடைசியாக உணர்ந்திடுவோம் இதுதான் வாழ்வில் இயற்கை கோட்பாடு.

– பஹ்ரியாபாயிஸ் –

# முஸ்லிம் காங்கிரஸ் மரத்தில் தனித்துப்போட்டி

## ரவூப் ஹக்கீம் எம்.பி

(கே. எ. ஹமீட்)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மரச்சின்னத்தில் தனித்துப் போட்டியிடுவதாக(21) "தாருஸலாம்" தலைமையகத்தில் நடைபெற்ற கட்சியின் கொழும்பு மாவட்ட மத்திய குழுக்கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தலைமையில் பாராளுமன்ற உறுப்பினர்களான கட்சியின் செயலாளர், ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர், எம்.எஸ்.உதுமா லெப்பை, எம்.எஸ். நழீம் மற்றும் கட்சியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளர், முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் அர்ஷாத் நிஸாம்தீன் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் நடைபெற்ற கூட்டத்திலேயே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பிரஸ்தாப கொழும்பு மாவட்ட மத்திய குழுக்கூட்டத்தில் தற்போதைய அரசியல் சூழ்நிலையை மையப்படுத்தி நீண்டநேரமாக கலந்துரையாடப்பட்டதன் பின்னர், கொழும்பு, தெஹிவலை-கல்கிஸ்ஸ, கோட்டே, மொரட்டுவை, கொலன்னாவ மாநகர சபைகளுக்கும், கொடிகாவத்தை -முல்லேரியா போன்ற பிரதேச சபைகளுக்கும் முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடுவதென்ற முடிவை தலைவர் அறிவித்ததோடு, அடுத்த கட்ட நடவடிக்கைகளை கட்சி உடனடியாக ஆரம்பிக்கவுள்ளதாகவும் அறிவித்தார்.

# யாழ் முஸ்லிம் சமூக ஜோதி விருது 2024



யாழ் முஸ்லிம் சமூக ஜோதி விருது -2024 இற்கு 5 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

யாழ் முஸ்லிம் சமூக ஜோதி விருது -2024 இற்கு எஸ்.எம்.மீரான் ஸாஹிப் பௌண்டேஷன் சார்பில் எம்.எஸ்.ஜாபிர் அவர்கள் அனுசரணை வழங்குகிறார்.

யாழ் முஸ்லிம் சமூக ஊடக நிர்வாகி கலாபூஷணம் பரீட் இக்பால் அவர்களின் ஏற்பாட்டில் வழங்கவிருக்கும் "யாழ் முஸ்லிம் சமூக ஜோதி" விருது 2024 ஆம் ஆண்டுக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் சமூகப் பற்றுள்ள கல்வியியலாளரும் முதலாவது யாழ் முஸ்லிம் வணிக பட்டதாரியுமான எம்.ஏ.சி. அப்துல் ஸலாம், சமூகப்பற்றுள்ள கல்வியியலாளர் மஹ்றூப் ஏ.காதர், முன்னாள் யாழ் மத்திய கல்லூரி, சிறந்த கிரிக்கெட் வீரர் அபூபக்கர் சுல்தான், கவிஞர் யாழ் அஸீம், முன்னாள் யாழ் முஸ்லிம் விளையாட்டுக் கழக உதைபந்தாட்ட நட்சத்திர கோல் கீப்பர் எம். எம்.முனாஸ். ஆகிய ஐவரும் ஆவார்.



# பேருவளை ஜெம் பியுரோவின் 50 வருட பூர்த்தி நிகழ்வும், மூன்றாவது கிளை விற்பனை நிலைய திறப்பு விழாவும்





( பீ.எம் முக்தார்)

இரத்தினக்கல் மற்றும் ஆபரண விற்பனையில் புகழ்பெற்ற பேருவளை ஜெம் பியுரோவின் 50 வருட பூர்த்தி நிகழ்வும், மூன்றாவது கிளை விற்பனை நிலைய திறப்பு விழாவும் கடந்த 18 ஆம் திகதி நடைபெற்றது.

பேருவளை ஜெம் பியுரோவின் புதிய காட்சியறை இலக்கம் 42/1, வெலிப்பன்னை வீதி, அளுத்கமையில் கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டது.

ஜெம் பியுரோ அதிபதியும், பேருவளை நகர சபை முன்னாள் தலைவருமான அல்-ஹாஜ் எம். மஸாஹிம் முஹம்மத் தலைமையில் நடைபெற்ற திறப்பு விழாவில் இலங்கையின் முதலாவது பள்ளிவாசலான பேருவளை மருதானை மஸ்ஜிதுல் அப்ரார் பள்ளிவாசலின் நிர்வாக சபை உறுப்பினர் அல்-ஹாஜ் முஹம்மத் பயாஸ் ஜே.பி உட்பட உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் கலந்து கொண்டனர்.

உல்லாச பயணபுரியாக திகழும் பெந்தொட்டை மற்றும் அளுத்கமையை மையமாகக் கொண்டு பேருவளை ஜெம் பியுரோ கிளை அளுத்கம நகரில் ஆரம்பிக்க-ப்பட்டுள்ளது.

முதலாவது கிளை மருதானையிலும், இரண்டாவது கிளை அஹூன் கல்லையிலும் ஆரம்பிக்கப்பட்டதுடன் புதிய மூன்றாவது கிளை விலை மதிப்புள்ள இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்களை கொண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உல்லாசப் பயணிகளுக்கு தேவையான அனைத்து பொருட்களும் இங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது.

50 வருட காலமாக மிகவும் நம்பிக்கையுடன் பேருவளை ஜெம் பியுரோ வெற்றிகரமாக இயங்குவதாக அதன் அதிபதி மஸாஹிம் முஹம்மத் தெரிவித்தார்.

ஐரோப்பிய மற்றும் அரபு நாடுகளின் உல்லாசப் பயணிகளுக்கு மற்றும் பல்வேறு நாடுகளையும் சேர்ந்த உல்லாசப் பயணிகள் தொடர்ந்தும் இந்த இடத்தை நாடி வருவது நம்பிக்கையின் வெளிப்பாடே எனவும் அவர் கூறினார்.

அளுத்கமையில் திறக்கப்பட்டுள்ள புதிய கிளை இரத்தினக்கல், தங்க ஆபரண நூதனசாலையும் உள்ளடக்கியதாகும்.

# அனுராதபுரத்தில் 54 யானைகள் உயிரிழப்பு



(எம்.ரீ. ஆரிப்)

அனுராதபுரம் மாவட்டத்தில் கடந்த 2024 ஆம் ஆண்டு 54 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதாக வனவிலங்கு திணைக்களம் தெரிவித்தது.

கடந்த 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது குறைந்துள்ளதாக அனுராதபுரம் உதவி வனவிலங்கு பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்தது.

அனுராதபுரம் வனவிலங்கு வலயத்திற்குள் 2023 ஆம் ஆண்டில் 87 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதுடன் கடந்த வருடம் அக்டோபர் மாதமே அதிக யானை மரணங்கள் பதிவாகியுள்ளதாகவும் அலுவலகம் தெரிவித்தது. அதன் எண்ணிக்கை 09 ஆகும்.

பெரும்பாலான இறப்புக்கள் மனித நடவடிக்கைகளினால் ஏற்பட்டுள்ளன. துப்பாக்கிச் சூட்டில் 12 யானைகளும் , வாய் வெடி மூலம் 11 யானைகளும் , மின்சாரம் தாக்கியதில் 09 யானைகளும் உயிரிழநள்ளன. 07 யானைகள் இறந்ததற்கான காரணம் கண்டறியப்படவில்லை. இயற்கை அனர்த்தங்களினால் 05 யானைகள் உயிரிழந்துள்ளன. விஷம் அருந்தியதில் 04 யானைகள் உயிரிழந்துள்ளன. புழு நோய் மற்றும் காயம் தொற்று காரணமாக 05 யானைகள் உயிரிழந்துள்ளதுடன் புகையிரதம் மற்றும் விவசாய கிணற்றில் விழுந்து 02 யானைகளும் உயிரிழந்துள்ளதாக வனத்துறை அலுவலகம் தெரிவித்தது.

இதற்கிடையில் கடந்த ஆண்டில் யானைகளின் தாக்குதல் காரணமாக 32 பேர் உயிரிழந்துள்ளதாக அனுராதபுரம் உதவி பணிப்பாளர் டபிள்யூ.எம்.கே.எஸ்.சந்திரரத்ன தேரிவித்தார்.யானைகளின் தாக்குதல்களினால் உயிரிழந்த மக்களுக்கான இழப்பீடுட்டுத் தொகை இரண்டு கோடி ஐம்பத்தைந்து இலட்சம் ஷருபாவை அனர்த்த நிவாரணங்கள் குழுவினால் வழங்குவதற்கு அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கல்குடா வை.எம்.எம்.ஏ. அமைப்பினால் மஜ்மா நகரில் கொரோனா மர நடுகைத்திட்டம்







(எஸ்.எம்.எம்.முர்ஷித்)

வை.எம்.எம்.ஏயின் 75வது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு தேசிய நிர்மாண வேலைத் திட்டத்தின் கீழ் கோறளைப் பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச சபை பிரிவிற்குட்பட்ட மஜ்மாநகர் கொரோனா மையவாடியைச் சுற்றி ஆயிரம் மரக்கண்டுகளை நடும் வேலைத்திட்டத்தை கல்குடா வை.எம்.எம்.ஏ. கிளையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பேரவையின் தேசியத்தலைவர் அல் ஹாஜ் அம்ஹர் ஷரீபின் ஆலோசனைக்கமைவாக ஓட்டமாவடி பிரதேச சபையின் செயலாளர் எஸ்.எம். சஹாப்தீனின் வழிகாட்டலில் முன்னாள் தலைவர் அல் ஹாஜ் எம்.ரீ.தாஸீம் பவுனீயா, மாவட்டப் பணிப்பாளர் எம்.ஆர்.ஜெமீல், முன்னாள் பணிப்பாளர் ஏ.பி.எம்.இர்பான், செயலாளர் ஏ.எல்.லியாப்தீன் ஜேபி, பொருளாளர் எம்.எச். எம்.ஆசிக் ஆசிரியர் மற்றும் ஓட்டமாவடி, வாழைச்சேனை, பாலை நகர் கிளைகளின் தலைவர்கள், உறுப்பினர்கள், பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

கல்குடா மத்திய கிளையின் தலைவர் எம்.ஐ. ஜஹாப்தீன் ஜே.பி தலைமையில் முன்னெடுக்கப்படும் குறித்த திட்டத்திற்கு சிட்டி கார்டன் நிறுவனம் அனுசரணை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.



அரபாத் பஹர்தீன்

## அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர்:

# அரையிறுதிக்குத் தகுதி பெற்றார் ஜெக்கோவிச்

உலகப் புகழ் பெற்ற அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரின் முதல் இரு காலிறுதிப் போட்டிகளில் இலகு வெற்றி பெற்ற சேர்பியாவின் ஜெக்கோவிச் மற்றும் ஜேர்மனியின் ஸெவெரோவ் ஆகியோர் தீர்மானமிக்க அரையிறுதியில் பலப்பரீட்சை நடாத்தவுள்ளனர்.

உலக டென்னிஸ் தொடரின் முதல்நிலை தொடராக கருதப்படும் அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் கடந்த 6ஆம் திகதி ஆரம்பித்து எதிர்வரும் 26ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

அதற்கமைய இத் தொடரில் ஆடவர் ஒற்றையர், இரட்டையர் மற்றும் மகளிர் ஒற்றையர், இரட்டையர் மற்றும் கலப்பு இரட்டையர் என ஐந்து பிரிவுகளாக இடம்பெறுகின்றது. இந்நிலையில் ஆடவர் ஒற்றையர் பிரிவின் முதல் இரு காலிறுதிப் போட்டிகளும் நேற்று முன்தினம் இடம்பெற்றிருந்தது.

அதில் முதல் காலிறுதிப் போட்டியில் ஜேர்மனியின் ஸெவெரேவ் அமெரிக்காவின் பொவுலை எதிர்த்தாடினார். இப்போட்டியின் முதல் இரு செட்களிலும் ஆதிக்கம் செலுத்திய ஸெவெரோவ் 7:6, 7:6 என போராடி வென்றார். இருப்பினும் 3ஆவது செட்டை பொவுல் 6:2 என வென்றெடுத்தார். இதனால் ஆட்டம் சற்று சூடு பிடிக்க 4ஆவது செட்டை 6:1 என இலகுவாக கைப்பற்றிய ஸெவெரோவ் 7:6, 7:6, 2:6 மற்றும் 6:1 என வெற்றி கொண்டு அரையிறுதிக்குள் நுழைந்தார்.

தொடர்ந்து இடம்பெற்ற 2ஆவது காலிறுதி ஆட்டத்தில் முன்னாள் முதல்நிலை வீரரான சேர்பியாவின் நவோக் ஜெக்கோவிச் ஸ்பெய்னின் அல்கராசை எதிர்த்து விளையாடினார். இதில் முதல் செட்டை 4:6 என இழந்த ஜெக்கோவிச் பின்னர் சுதாகரித்து ஆடி அடுத்த 3 சுற்றுக்களையும் 6:4, 6:3 மற்றும் 6:4 என இலகுவாக கைப்பற்றி அரையிறுத்திக்குத் தகுதி பெற்று அசத்தினார்.

## இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடர்: ஸ்மித் விளையாடுவது சந்தேகம்



இலங்கை அணிக்கு எதிராக இடம்பெறவுள்ள 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் அறிவிக்கப் பட்டுள்ள அவுஸ்திரேலியா டெஸ்ட் அணியின் தலைவரான ஸ்டீவன் ஸ்மித் காயமடைந்துள்ளமையால் இத்தொடரில் விளையாடுவது சந்தேகம் என அந்நாட்டு கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

எதிர்வரும் 29ஆம் திகதி ஆரம்பிக் கவுள்ள இலங்கை மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய அணிகளுக் கிடையிலான உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் அங்கமான இத் தொடரில் அவுஸ்திரேலிய அணியின் தலைவரான பெட் கமின்ஸ ிற்கு ஓய்வு வழங்கப்பட்டிருக்க அவருக்கு பதிலாக இத் தொடரை வழிநடாத்த நட்சத்திர துடுப்பாட்ட வீரரான ஸ்டீபன் ஸ்மித் நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் தற்போது நடைபெற்று வருகின்ற பிக் பாஷ் லீக் ரி20 கிரிக்கெட் தொடரில் சிட்னி சிக்சர்ஸ் அணிக்காக விளையாடி வரும் ஸ்மித் சிட்னி தண்டர் அணிக்கு எதிரான போட்டியின் போது வலது முழங்கையில் காயம் ஏற்பட்டு போட்டியிலிருந்து வெளியேறினார்.

இதன் காரணமாக இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கு முன் துபாயில் நடைபெறவுள்ள பயிற்சி முகாமில் அவரது பங்கேற்பு தாமதமாகியுள்ளது.

இந்த நிலையில், ஸ்மித் தற்போது மருத்துவ நிபுணரின் ஆலோசனை பெற்று வருவதாகவும், எதிர்வரும் நாட்களில் அவர் பயிற்சி முகாமில் இணைய எதிர்பார்ப்பதாகவும் அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

எது எவ்வாறாயினும், காயம் காரணமாக ஸ்மித்தால் தொடரில் விளையாட முடியாவிட்டால், உதவித் தலைவர் ட்ராவிஸ் ஹெட் முதல் முறையாக அவுஸ்திரேலிய டெஸ்ட் அணியை வழிநடத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## ரிஸ்வான் ஸாலி உதைபந்தாட்டத் தொடரில்

# பேருவளை கிரேட் ஸ்டார் சாம்பியன்

(பேருவளை பீ.எம்.முக்தார்)

பேருவளை உதைப்பந்தாட்டச் சங்கம் "தலைவர் ரிஸ்வான் ஸாலி வெற்றிக் கிண்ணத்திற்காக" நடாத்திய உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி 18 ஆம் திகதி (18-01-2025) களுத்துறை வேனன் பெர்ணான்டோ விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

பேருவளை கிரேட் ஸ்டார் உதைப்பந்தாட்ட கழகமும், தர்கா நகர் ரெட் ஸ்டார் உதைப்பந்தாட்ட கழகமும் இறுதிப் போட்டியில் மோதியதோடு, பேருவளை கிரேட் ஸ்டார் விளையாட்டு கழகம் 6-1 என்ற கோல் வீதத்தில் வெற்றி பெற்று சாம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.







பேருவளை உதைப்பந்தாட்ட சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட 20 விளையாட்டு கழகங்கள் இச் சுற்றுப்போட்டியில் பங்கு பற்றியதுடன் இறுதிப் போட்டிக்கு மேற்படி இரு அணிகளும் தெரிவாகின.

போட்டி ஆரம்பமாகி 5வது நிமிடத்தில் கிரேட் ஸ்டார் விளையாட்டு கழக வீரர் தமது அணிக்கு கோல் ஒன்றை பெற்றுக் கொடுத்தார்.

மேலும், 18ஆவது நிமிடத்தில் மற்றுமொரு கோல் ஐ கிரேட் ஸ்டார் அணி பெற்றுக் கொண்டது.

அதைத் தொடர்ந்து மேலுமொரு கோல் ஐ பெற்றுக் கொண்டதோடு, தர்கா நகர் ரெட் ஸ்டார் அணி வீரர் தமது அணிக்காக ஒரு கோல் ஐ பெற்றுக் கொடுத்தார்.

இடைவேளைக்கு முன்னர் இறு அணி வீரர்களும், தமது அணிக்கு மேலும் கோல்களை பெற்றுக் கொடுக்க விடா முயற்சியோடு ஆட்டத்தில் ஈடுபட்டனர்.

இடைவேளையின் பின்னர் போட்டி மீண்டும் ஆரம்பமானது. பேருவளை கிரேட் ஸ்டார் அணி இடையிடையே மேலும் கோல்களை பெற்று 6-1 என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றியீட்டியது.

பேருவளை கிரேட் ஸ்டார் அணி கெப்டன் முஹம்மது ரிமாஷ் தமது அணியை சிறப்பாக வழிநடாத்தி 6 கோல்களை பெற்றுக் கொண்டு சாம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

தலைவர் வெற்றி கிண்ணத்திற்காக நடாத்தப்பட்ட சுற்று போட்டிக்கான முழுச் செலவையும் பேருவளை உதைப்பந்தாட்டச் சங்கத்தின் தலைவர் எம்.எஸ்.எம்.ரிஸ்வான் ஹாஜியார் பொறுப்பேற்றிருந்தார்.

பேருவளை மஹகொட ஐ.எல்.எம்.ஸம்ஸ /தீன் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற தலைவர் கிண்ண அறிமுக நிகழ்வில் அவர் 10 லட்சம் ஷரூபாய் அன்பளிப்புச் செய்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.



18 ஆம் திகதி மாலை நடைபெறும் பரிசளிப்பு விழாவுக்கு தலைவர் எம்.எஸ். எம் ரிஸ்வான் ஹாஜியார் தலைமை வகித்தார்.

இலங்கை உதைப்பந்தாட்டச் சம்மேளனன தலைவர் எம்.ஜஸ்வர் உமர் பிரதம அதிதியாகவும், உப தலைவரும் களுத்துறை உதைப்பந்தாட்ட சங்க தலைவருமான டொக்டர் மனில் பெர்ணாந்து கௌரவ அதிதியாக கலந்து கொண்டனர்.

களுத்துறை பொலிஸ் பயிற்சி கல்லூரி சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி கே.டி சந்திரபால, களுத்துறை முன்னாள் நகரபிதா ஆமிர் நஸீர் ஆகியோர் விஷேட அதிதிகளாகவும் பங்கு பற்றினர்.

பேருவளை உதைப்பந்தாட்ட சங்க முன்னாள் தலைவரும், சுற்றுப் போட்டி ஏற்பாட்டுக் குழு தலைவருமான ஏ.ஆர்.எம் பதியூத்தீன், உப தலைவர் முஹம்மத் ஸனூபர், செயலாளர் எம்.எஸ்.எம் ஸினான், பொருளாளர் ஏ.ஜே.எம் அக்பர், அவிஸ்ஸாவெல்ல உதைப்பந்தாட்ட சம்மேளன தலைவர் உட்பட உறுப்பினர்கள், இதன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள 20 கழகங்களின் தலைவர்கள், செயலாளர்கள் மற்றும் உறுப்பினர்கள், பிரமுகர்கள், பெருமளவிலான ரசிகர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.